விலை : 20.00
பக்கங்கள் :இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 14 செவ்வாய்க்கிழமை (30.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

## காணாமல்போனோர்; கவனயீர்ப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இன்றைய தினம் வட கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

வட கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மையான நிலையை வெளிப்படுத்தக்கோரி காணாமல் போனோருக்கான சர்வதேச தின

23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
வணிகக்கல்வியும்
கணக்கீடும் பகுதி-I,II

உள்ளே...

### இலாபகரமான நட்டஈடு வழங்குவதாகக் கூறி

# காணிகள் கபளீகரம்; மக்கள் கொதிப்பு!


கோப்புப்படம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் படையினரால் சுவீகரிக்கப்படும் பொது மக்களின் காணிகளுக்கு இலாபகரமான நஷ்டஈடு வழங்குவதாக தெரிவித்து அதற்கு சம்மதம் தெரிவிக்குமாறு கோரி நேற்றைய தினம் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தால் பொது மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளதுடன் தமது எதிர்ப்பினையும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வாறு திட்டமிட்ட வகையில் வலி வடக்கு காணிகளை சுவீகரிக்கும் அரசினுடைய கபளீகரச் செயற்பாட்டிற்கு எதிராக விரைவில் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.போதனா வைத்தியர் வீதி விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ப்பு நிலையத்திற்கு அருகில் இடம்

## நட்டஈடு தருவதான படிவங்களில் எவரும் கையொப்பமிடவேண்டாம்

பிரதமரிடம் இன்று பேசவுள்ளேன்-மாவை

## தாய், தந்தையரை போன்றே காணிகள்

(யாழ்ப்பாணம்)

பெற்றதாய்தந்தையரைப்போன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியர் வீதி விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் நிரப்பு நிலையத்தி லிருந்து வீதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை பின்னால் வந்த பேருந்து மோதிய தில் யாழ்.போதனா வைத்தியசா லையில் கடமையாற்றும் வைத்தி யர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6. 40 மணியளவில் கோப்பாய் சந்தி க்கு அருகில் உள்ள பெற்றோல் நிர ப்பு நிலையத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

இதில் கரவெட்டி துன்னாலை யைச் சேர்ந்த வைத்தியரான தங்க ராஜா செல்வரன் (வயது 36) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயி ரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, உயிரிழந்த மேற்படி வைத்தியர் கோப்பாய் எரிபொருள

23ஆம் பக்கம் பார்க்க....

# நட்டஈடு தருவதான படிவங்களில் எவரும் கையொப்பமிடவேண்டாம்

## பிரதமரிடம் இன்று பேசவுள்ளேன்-மாவை



(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பகுதி மக்களிடம் சொந்த காணிக்கு பதிலாக நட்ட ஈடு தருவதாக கூறி வழங்கப்படும் படி வங்களுக்கு மக்கள் எவரும் கை யொப்பமிட வேண்டாம் என தமிழ ரசுக்கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வலி வடக்கில் இருந்து இடம

24ஆம் பக்கம் பார்க்க....

# தாய், தந்தையரை போன்றே காணிகள்

(யாழ்ப்பாணம்)

பெற்றதாய்தந்தையரைப்போன்றே வலி வடக்கு மக்களுக்கு அவர்க ளுடைய காணிகள் முக்கியமான தாக உள்ளதாகவும், மாற்று காணி களுக்கோ நஷ்டஈட்டுக்கோ இட மில்லை எனவும் வடமாகாண முத லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

வலிகாமம் வடக்கு உயர்பாது காப்பு வலயத்திற்குள் படையினரு க்கு தேவையான காணிகளைத் தவிர்ந்த மற்றைய காணிகள் வழ ங்கப்படும், படையினருக்கு தேவை யான காணிகள் சுவீகரிக்கப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு பெறு மதியான நஷ்டஈடு வழங்கப்படும் என யாழ். மாவட்ட பாதுகாப்பு படை களின் கட்டளை தளபதி மேஜர் ஜென ரல் மகேஷ் சேனநாயக்க அண் மையில் கூறியிருக்கின்றார்.

23ஆம் பக்கம் பார்க்க....

# சொந்த இடத்தில் மக்கள் மீள்குடியேறும் போது உலக வங்கியினால் மேலும் உதவிகள் வழங்கப்படும்

## உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய தலைவர் உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட வட க்கு மக்கள் தமது சொந்த காணிக ளுக்கு மீள திரும்பும் போது அவர் களுக்கு வேண்டிய உதவிகளை உலக வங்கி மேலும் வழங்கும் என வடக்கு மாகாண முதலமை ச்சரிடம் உலக வங்கியின் தெற்கா சிய பிராந்திய தலைவர் அனாட்டே டிக்ஷன் [Annette Dixon] உறுதிய ளித்துள்ளார்.

தெற்காசிய பிராந்திய தலைவர் தலைமையிலான உலக வங்கி

24ஆம் பக்கம் பார்க்க....

உள்ளே...

கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை - 2016

மாதிரி வினாத்தாள்

# பயங்கரவாத புலனாய்வு பிரிவு மனித உரிமைகளை மீறுகிறது

## உச்ச நீதிமன்றில் மனுதாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்து ரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பயங்கரவாத புலனாய்வு பிரிவு மீறி செயற்படுவதாக குற்றம்சாட்டி உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்று தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி லக்சான் டயஸ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால கைது செய்யப்பட்டு தடுத்து வைக்க ப்பட்டுள்ள கைதிகளை முன் அனு மதியின்றி சட்டத்தரணிகள் சந்தி க்க முடியுமென ஜனாதிபதி மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில தெரிவிக்கப்பட்டுள்ளதாக அந்த மனு வில் கூறப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

# கடற்படை பேருந்து மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை பகுதியில் நேற்றைய தினம் கடற்படையின ரின் பேருந்து மோதியதில் படுகாய மடைந்த குடும்பஸ்தர் ஒருவர் வைத் தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை பழைய தபால் கந்தோர் வீதியை சேர்ந்த வன்னி யர் சற்குணராஜா (வயது 60) என் பவரே இதில் உயிரிழந்தவராவார்.

நேற்றைய தினம்மாலை 3 மணி யளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்ற கடற்படையினரின் பேருந்து ஒன்று வீமன்காமம் சந்தை வீதியில் தெல் லிப்பழை நோக்கி துவிச்சக்கர

24ஆம் பக்கம் பார்க்க....

# பிரசாந்தனுக்கு பிணை அனுமதி



(மட்டக்களப்பு)

கொலை குற்றச்சாட்டின் பேரில் 10 மாதங்களாக விளக்கமறியலில்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



(5765)

## சிலம்பு கனகராசா

வன்னி விளாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் ஆலங்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது 146/A,குட்சைட் றோட்டை வசிப்பிடமாகவும் வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தற்போதைய பூசகருமாகிய சிலம்பு கனகராசா அவர்கள் கடந்த (27.08.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிலம்பு- பார்வதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற நடராசா- செல்லாச்சி அவர்களின் மருமகனும், யோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகேஸ்வரி அவர்களின் சகோதரரும், காலஞ்சென்ற வைரமுத்து, ராசையா ஆகியோரின் பெறாமகனும், கலைச்செல்வி (வதனி- கனடா), சிவலோகநாதன் (வசந்தன்- லண்டன்), தர்மசீலன் (கனடா), தயாளன் (கனடா), நளினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார் (கனடா), இந்துஷா (கனடா), அருந்துஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவா, ராசா, துரை, ராசாத்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ப்ரதிக்ஷா, ப்ரக்ஷன், கஜானன், யதீன், யோஷனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தோணிக்கல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: யோகேஸ்வரி -077 958 7873,
சீலன் -077 349 9249
146/A, குட்சைட் வீதி, வவுனியா.

தகவல் : மனைவி,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

## செப்.9-ம் திகதிவரை மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சி.வித்தியாவின் தாயாரை அச்சுறுத்திய பெண்மணியை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை குறித்த வழக்கு நீதவான் எம்.எல் றியால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இதன்போது எதிர்வரும் தவணையின் போது சட்டத்தரணி ஊடாக மன்றிற்கு சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் தொடர்பாக விளக்கம் கோரப்பட உள்ளது எனவும் எனவே எதிர வரும் செப்டம்பர் மாதம் 9 திகதி வரை குறித்த வழக்கை ஒத்திவைப்பதாக நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

# துயர் பகிர்கின்றோம்



## அமரர் சுப்பிரமணியம் இராமநாதபிள்ளை (இராமநாதன்)

எங்களது நெருங்கிய உறவினரும் குடும்ப உறவுகளில் பங்கு கொண்டவரும், அன்பாக உதவியவரும்.பழகியவருமாகிய சுப்பிரமணியம் இராமநாதபிள்ளை (இராமநாதன்) அவர்களின் மறைவுச்செய்தி எமது குடும்பத்தினருக்கு அதிர்ச்சியையும்.ஆழ்ந்த கவலையையும் உள்ளாக்கியது.கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும். வளர்ப்பிடமாகவும். யாழ் போதனா வைத்தியசாலை முன்னாள் இரத்த வங்கி (Blood Bank) ஊழியருமான அமரர் சுப்பிரமணியம் இராமநாதபிள்ளை (இராமநாதன்) கனடாவில் வசித்து வந்த காலத்தில் அமரத்துவம் அடைந்து விட்டார். அன்னாரை பிரிந்து தவிக்கும் எங்கள் உறவுகளான அமரரின் மனைவி இராசமலர், பிள்ளைகளான ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சன், ஸ்ரீபாஸ்கர், ஜெயரஞ்சினி, ஸ்ரீராஜ் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவர்களின் துயரவில் பங்கு கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமியை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

**திருமதி மங்கயர்கரசு நடராசா (திருச்செல்வம் மாஸ்டர்)**
**மற்றும் திருச்செல்வம் மாஸ்டர் குடும்பத்தினர்**
மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(சி-5578)


# North Lanka IIT

## அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் பதவி உயர்விற்கும் சம்பள உயர்வுக்குமான UGC அங்கிகாரம் பெற்ற கற்கை நெறிகள்.

*B.Ed. English - வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
*B.A. English
*B.Ed. ஆரம்ப கல்வி - வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது
*B.Ed. சித்திரம்
*B.Ed. IT
*Top Up Degree in B.Sc. in Computer Science
*B.Ed. தமிழ்

Duration : 1 – 1½ Years

மேற்படி கற்கைநெறிக்கு பதிவு செய்ய விரும்புவோர் உடனடியாக நேர்முகப்பரீட்சைக்கு பங்குபெற்றி பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

College of Education / Training College டிப்ளோமா சான்றிதழ்கள், HND சான்றிதழ்கள் உடையவர்கள் மேற்படி கற்கைநெறிகளில் பொருத்தமானதுக்கு விண்ணப்பிக்கலாம்

O/L சித்தி அடைந்தவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். நீங்களும் பட்டதாரி ஆகலாம்

B.Sc. in Computer Science
Duration:
2-3 Years

*விண்ணப்படிவத்தை சுயமாகத் தயாரித்து பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.
*நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 03.09.2016 எமது வளாகத்தில் நடைபெறும்.

(சி-5577)

People's Bank Building, Top Floor, Stanly Road, Jaffna.
Contact: 0767504555, 0214927088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு போரை நாம் விரும்பவில்லை



## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்

*(கொழும்பு)*

***நாட்டைப் பிளவுபடுத்துவதையோ, இன்னொரு போரையோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.***

எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்ற இரா.சம்பந்தன், நேற்று முன்தினம் மாத்தறையில், இடம்பெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றார். இதையடுத்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

“அதிகாரங்கள் பகிரப்பட்ட- பிளவுபடாத ஒரே நாட்டுக்குள் ஒற்றுமையாக வாழ்வதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். ஒரு நாட்டுக்கு முப்படைகளும் அவசியமானவை. நிதி.வெளிவிவகாரம். குடிவரவு. குடியகல்வு ஆகிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் வசமே இருக்க வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்துவதற்கோ, இன்னொரு போரையோ எமது கட்சி விரும்பவில்லை.

நாம் போரின் விளைவுகளை அனுபவித்தவர்கள். எதிர்காலத்தில் இன்னொரு போருக்கு வழிவகுக்கும் காரணிகளை இல்லாமல் செய்ய வேண்டும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## ஒற்றுமை ஏற்படும்வரை அவர் வளர்க்க மாட்டார் நான் வெட்ட மாட்டேன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் உட்பூசல் முடிவுக்கு வரும் வரையில், தான் தன்னுடைய தலைமயிரை வெட்டப்போவதில்லை என்றும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க வளர்க்கப் போவதுமில்லை என்றும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தான், தற்போது ஆதிவாசிகளின் தலைவர் என்றும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அதனால் தான், தனக்கு மகியங்கனை தொகுதிக்கான அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் தம்புத்தேகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் ,

“1994ஆம் ஆண்டில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இலங்கைக்கு வந்து, எமது கட்சியை ஒன்றிணைத்தார். அவர் தேர்தலில் போட்டியிட்ட போது, எமது கட்சி, ஒரு தொகுதியில் மாத்திரமே தோல்வியடைந்தது. அது மகியங்கனைத் தொகுதியாகும். அந்தத் தேர்தலின் பின்னர், மகியங்கனைத் தொகுதியை பொறுப்பேற்குமாறு, சந்திரிகா, எனக்குக் கூறினார். நானும், அதனைப் பொறுப்பேற்றுக்கொண்டேன்.

சு.க.வுக்குள் ஒற்றுமை வலுப்பெறும் வரையில், நான் எனது தலைமயிரை வளர்ப்பேன். அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும், அது வரையில் தன்னுடைய தலைமயிரை வளர்க்கப் போவதில்லை. நான் தலைமயிர் வெட்ட வேண்டுமாயின், துமிந்த திஸாநாயக்க, தலைமயிர் வளர்க்க வேண்டுமாயின், கட்சியை ஒற்றுமைப்படுத்துங்கள்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## இறுதிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தவும்

தேருநர் இடாப்பில் தமது பெயர்களை பதிவு செய்யாதவர்களும் பதிவு செய்த பெயர்களை பரிசீலிப்பவர்களும் அதற்கான இறுதிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறு தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கணக்கெடுக்கும் அலுவலரால் (கிராம அலுவலர்) நீக்கப்படுவதற்காக சிபார்சு செய்யப்பட்டுள்ள பெயர்களும் தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள பெயர்களும் அடங்கிய பட்டியல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி வரை மாவட்டத் தேர்தல் அலுவலகம் . பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், உள்ளூராட்சி அலுவலகங்கள் ஆகிய இடங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

உரிமைக் கோரிக்கைகள், ஆட்சேபனை தெரிவித்தல் போன்ற பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்படும் காலப்பகுதியினுள் குறிப்பிட்ட மாவட்டத்தின் பதிவு அலுவலருக்கு (மாவட்ட செயலாளர்) அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் உதவிப் பதிவு அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2016 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் பெயர் சேர்க்கப்படுவதற்காக இருக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாதலால் உடனடியாக தங்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## புலனாய்வுப் பிரிவு அதிகாரி மறியலில்

ரிவிர பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னக்கோனை தாக்கியதாக கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.பிரேம் ஆனந்த உதலாகம என்ற இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியே இவ் வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் காவிந்தா நாணயக்கார உத்தரவிட்டுள்ளார். (இ-7-10)

## ஜனாதிபதி மைத்திரியும் 5 நாள் அரச விடுமுறை



இலங்கையின் அரச மற்றும் தனியார் பணியாளர்கள் பெறும் 5 நாட்கள் விடுமுறையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பெற்றுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பொலனறுவையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ள இருந்த ஜனாதிபதி இறுதி நேரத்தில் அதனை இரத்து செய்துள்ளார்.

அத்துடன் அதற்கு அடுத்த நாளான வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தனக்கு இருந்த் அத்தனை கடமைகளையும் இரத்து செய்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தினங்களில் ஜனாதிபதி தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும், சாதாரண மருத்துவ பரிசோதனைகளின் பொருட்டே ஜனாதிபதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் ஜனாதிபதி தரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன.

இதற்காகவே தனது முக்கிய பயணங்களை ஜனாதிபதி இரத்து செய்திருந்த போதும், கட்சியின் 65 ஆவது மாநாட்டிற்காக முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## சர்வதேச காணாமற்போனோர் தினமான இன்று வடக்கில் துக்கதினம் அனுஷ்டிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச காணாமற்போனோர் தினமான இன்று வடக்கில் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரியுள்ளனர். இந்த அறிவித்தலை கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர் சங்கம் விடுத்துள்ளளது. மேலும் இன்றைய தினம் கொழும்பு விஹாரமாதேவி பூங்காவிலும், களனியிலும் காணாமற் போனோரின் நினைவாக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இலங்கையில் கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாக நிலவிய யுத்தத்தின் காரணமாக பல ஆயிரக்கணக்கான உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களில் 99 வீதமானோர் இலங்கை இராணுவத்தினராலேயே காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்களாகியுள்ள நிலையில், காணாமற் போனோர், கடத்தப்பட்டோர் இதுவரை திரும்பவில்லை. இவர்களுக்கு என்ன நடந்தது என்றும் இதுவரை கூறப்படவில்லை. தற்போது நல்லாட்சி எனக் கூறுபவர்களும் பொறுப்புக் கூறலில் இருந்து விலகி வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டார் அலுவலகத்தையும் கொழும்பில் அமைத்து படையினரை பாதுகாக்கும் முயற்சிகளிலும் அவர்கள் இறங்கியுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது எமது கண்முன்னே சீருடை அணிந்த இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகள் இதுவரை எங்கே என்று தெரியவில்லை. இவ்வாறு கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பில் கண்கண்ட சாட்சியங்களாக நாம் இருக்கின்ற போதிலும் இலங்கையின் நீதித்துறை அது தொடர்பில் கண் மூடிய வண்ணமே இருக்கின்றது.

இன்றும் நாம் எமது உறவுகளை எதிர்பார்த்த வண்ணமே உள்ளோம். இந்த எதிர்பார்ப்புக்களை எல்லாம் இலங்கையின் ஆட்சியாளர்களும் எமது அரசியல் வாதிகளும் தமது அரசியலுக்காகவே பயன்படுத்தி வருகின்றனர். எமது குடும்ப தலைவர்கள், பிள்ளைகள் காணாமற் போனமையால் நாம் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அன்றாட வாழ்வென்பது சாதாரண மனிதர்களை போலல்லாமல் மிக கடினமாகவே உள்ளது. இன்றைய தினம் சர்வதேச காணாமற்போனோர் தினமாகும். இன்றைய நாளில் எமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி வடக்கில் கறுப்பு தினமாக அனுஷ்டிக்குமாறு நாம் கோருகின்றோம். எமது பிள்ளைகள் மக்களுக்காக போராடியதன் விளைவே இன்று அவர்கள் காணாமற் போயுள்ளனர். எனவே இன்று வடக்கில் உள்ள சகல வர்த்தக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களில் கறுப்புக் கொடி கட்டி துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். (இ-4)

## பாடசாலை கிரிக்கெட் துறையை மேம்படுத்த பிரதமர் அலுவலகம் நேரடிக் கண்காணிப்பு

பாடசாலை கிரிக்கெட் துறையை மேம்படுத்தும் பொறுப்புக்களை பிரதமர் அலுவலகம் கண்காணிக்க தீர்மானித்துள்ளது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் துறையை மேம்படுத்த இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி, பத்தாண்டு [illegible] கொழும்பு [illegible] தேசிய மற்றும் [illegible] பாடசாலை மட்ட வீரர்கள் [illegible] ஏ அணி [illegible] இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலை கிரிக்கெட் துறையை மேம்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முதற்கட்ட நடவடிக்கையாக கிராமிய பாடசாலைகளுக்கு தேவையான சகல வசதிகளையும் வழங்கவும், கிரிக்கெட் விளையாட்டை ஆரம்பிக்கக்கூடிய அனைத்து பாடசாலைகளிலும் ஆறு மாத காலத்திற்குள் கிரிக்கெட் விளையாட்டை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.(இ-7-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லாத சிம்பாப்வே வீரர்களுக்கு சிறை




ரியோ ஒலிம்பிக்கில் சிம்பாப்வே நாட்டின் சார்பாக மொத்தம் 31 வீரர்கள் கலந்து கொண்டனர். ஆனால் யாருமே பதக்கம் வெல்லவில்லை.

இந்த நிலையில் சிம்பாப்வே நாட்டின் சர்வாதிகார ஜனாதிபதி ரொபர்ட் முகாபே ரியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லாத வீரர்களை சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

ரியோ ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்லாத சிம்பாப்வே வீரர்களை சிறையில் அடைக்க அந்த நாட்டு அதிபர் உத்தரவிட்டதாக வெளியான செய்திகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

அந்த வீரர்களை எலிகளுடன் ஒப்பிட்டு ஜனாதிபதி பேசியதாகவும், நாட்டின் பணத்தை அவர்கள் வீண் செய்துவிட்டதாக கோபப்பட்டதாகவும் அந்நாட்டு இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த செய்தி உலகம் எங்கும் பரவி பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், அந்த செய்தியில உண்மையில்லை என்று ஜனாதிபதி மாளிகை விளக்கம் அளித்துள்ளது.

இதே போன்று ரியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லாத வட கொரியா வீரர்களை நிலக்கரி சுரங்கத்திற்கு வேலைக்கு அனுப்ப அந்த நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டதாக சமீபத்தில் செய்திகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (க)


## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத்தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

தினசரி 8 மணி முதல் 6 மணி வரை

**நாதன் இன்**

394 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்தி]

072 681 6681, 076 557 5394


## ஏல விற்பனை

யாழ்/ ஒஸ்மானியா கல்லூரியில் 01.09.2016 வியாழன் காலை 10.00 மணிக்கு பாவிக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனைக்கு விடப்படும் என்பதை அறியத் தருகிறோம். - அதிபர்

# நியூ ஹெவன் ஓபன் டென்னிஸ்
## சானியா – மோனிக்கா ஜோடி சம்பியன்



நியூ ஹெவன் ஓபன் டென்னிஸ் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்ஸா, ருமேனியாவின் மோனிகா நிகுலஸ்கு ஜோடி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

அமெரிக்காவில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ. அந்தஸ்து பெற்ற நியூ ஹெவன் ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வந்தது.

இந்த தொடரில் இரட்டையர் பிரிவு இறுதிப்போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, ருமேனியாவின் மோனிகா நிகுலஸ்கு ஜோடி, உக்ரைனின் கடேரினா பாண்டர்ன்கோ மற்றும் சீனா தைபேயின் சியா-ஜங் சுவாங் ஜோடியை எதிர்கொண்டது.

ஒரு மணி நேரம் 30 நிமிடம் வரை நீடித்த இப்போட்டியில் அசத்தலாக ஆடிய சானியா, மோனிகா ஜோடி 7-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இது இந்த ஆண்டு பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா வென்ற 7-வது பட்டமாகும். இந்த ஆண்டு நடைபெற்ற பிரிஸ்பேன், சிட்னி, அவுஸ்திரேலிய ஓபன், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், இத்தாலிய ஓபன், சின்சினாட்டி, நியூ ஹெவன் ஓபன் தொடர்களின் இரட்டையர் பிரிவில் சானியா பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# தோனி படம் எடுப்பதற்கு எத்தனை கோடிகள் வாங்கினார்?



இந்திய அணித்தலைவர் தோனி தன் வாழ்க்கையை படமாக எடுக்க தயாரிப்பாளரிடம் ரூ.60 கோடிகள் கேட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனியின் வாழ்க்கை, **தோனி: தி அன்டோல்ட் ஸ்டோரி** என்ற பெயரில் பாலிவுட்டில் எடுக்கப்பட்டுள்ளது. நீரஜ் பாண்டே இயக்கியுள்ள இந்தப் படத்தில் சுஷாந்த் சிங் ராஜ்புட் தோனியாக நடித்துள்ளார்.

இந்தப் படத்திற்கு பெரும் எதிர்பார்ப்பு உள்ள நிலையில், தன்னை பற்றி படம் எடுக்க தயாரிப்பாளரிடம் தோனி எவ்வளவு பணம் கேட்டார் என்ற தகவல் இப்போது தெரிய வந்துள்ளது.

அதாவது தோனி தன்னை பற்றி படம் எடுக்க அந்த படத்தின் தயாரிப்பாளரிடம் ரூ.60 கோடிகள் கேட்டதாக செய்தி வெளியாகியுள்ளது. இந்தப் படம் எடுக்க தோனி அனுமதி அளித்த உடனேயே அவருக்கு ரூ.20 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளதாம்.

சமீபத்தில் இந்தப் படத்தின் ட்ரைலர் வெளியாகி ரசிகர்களை அதிர வைத்தது. செப்டெம்பர 30-ம் திகதி வெளியாகவுள்ள இந்தப் படம் ரசிகர்களிடையே அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (க)

# 31-ம் நாள் நினைவுதின அழைப்பு

கடந்த 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்ற அமரர்



## வேலுப்பிள்ளை மாமாங்கம்

அவர்களின் 31-ம் நாள் நினைவாக இன்று 30.08.2016 செவ்வாய்க்கிழமை இறைவனின் பிரார்த்தனை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்ஞாபகார்த்த நாளில் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து இறைபிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கொடிகாமம் வீதி,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

(5770)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம்



கரவெட்டி கிழக்கு, வீரபத்திரர் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம் அவர்கள் 28.08.2016 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் சுந்தரலிங்கம் (இளைப்பாறிய உதவி பிரதேச முகாமையாளர் - மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், மனோகரி (ஆசிரியை - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), சுரேந்திரன் (லண்டன்), திவாகரன் (லண்டன்), நளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்னேஸ்வரன் (ஆசிரியர்-ஆவரங்கால் நடராஜராமலிங்க வித்தியாலயம்), லாவன்யா (லண்டன்), ஜெயானி (லண்டன்), வாதவூரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், நந்திதா, ஜதுசன், ஹம்சினி, அக்ஷரா, சேயோன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (30.08.2016) செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணியளவில் தகனத்துக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

- குடும்பத்தினர்

(C-5576)


# If you want to be a qualified Pharmacist?

மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் இலங்கை மருத்துவக் கல்லூரி சபையால் (CMCC) வருடம் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அடுத்த பரீட்சை மாசி/ 2017 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது. இதற்கான வகுப்புக்கள் சனி/ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் நடைபெற்று வருகிறது. புதிதாக மருந்தாளர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள். இந்த வருடம் சிறிலங்கா மருத்துவ சபையில் மருந்தாளர் பயிலுநராக பதிந்தால் இருவருடங்களின் பின்னர் பரீட்சை எழுதலாம். 2019ஆம் ஆண்டில் மருந்தாளராகத் தொழில் புரியலாம்.

மருந்தாளர் பயிலுநராகப் பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வயது எல்லையில்லை. கல்வித் தகைமைகள் G.C.E. O/L ஆங்கிலப் பாடத்தில் சாதாரண சித்தி, G.C.E. A/L ஒரே தடவையில் இரசாயன பாடம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.

2018ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்குரிய புதிய வகுப்புக்கள் கிழமை நாட்களில் புதன்/வெள்ளிக்கிழமைகளில் நடைபெற உள்ளது. புதிதாக பயில விரும்புபவர்கள் 02.09.2016 - வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளலாம். பயிற்சிக்கான மாதாந்தக் கட்டணம் ரூபா. 1500/=, யாழ்ப்பாணக் கல்லூரி அனுமதிக் கட்டணம் 500/=. மேலதிக தொடர்புகளுக்கு :

**மருந்தாளர் பரீட்சை இணைப்பாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, (வெளிவாரிப் பட்டப்படிப்பு)**
**(கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்) இல. 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே இல. : 077 625 6292**

(5767)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பதவி பறிக்கப்பட்டது

## மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி தன்னிடம் இருந்து பறிக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



2015 ஆம் ஆண்டு வரையில் தாம் கட்சியின் தலைவராக கடமையாற்றியதாகவும் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத் தழுவியதன் பின்னர், மைத்திரிபால சிறிசேன தமது பதவியை பறித்துக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சியின் தலைமைப் பொறுப்பினை தாம் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கவில்லை என்று குறிப்பிட்ட அவர் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியை சீர்குலைத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இரண்டு தடவைகள் தேர்தலில் தோல்வியடைந்துள்ளதால், கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மை வற்புறுத்தியதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத் தேர்தலில் சொந்தத் தொகுதியிலேயே தோல்வியைத் தழுவியிருந்தார் எனவும், தாம் ஒரு தட்வையே தேர்தல் தோல்வியை எதிர்நோக்கியதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## ஸ்ரீ.சுதந்திரக் கட்சியின் 65ஆம் ஆண்டு நிறைவு நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்65ஆம்ஆண்டுநிறைவு நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூட்டம் எதிர்பார்க்க படுவதாகவும் இதுவரை காலமும் தமிழ் முஸ்லிம் மக்கள் சக்தி சுதந்திரக் கட்சிக்கு இருக்கவில்லை என்ற போதிலும் தற்போது அந்தக் குறையும் நீங்கியுள்ளதாகவும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் நாட்களில் பாரிய முன்னகர்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

நிக ழ்வில் பங்கேற்கும் மக்க ளின் போக்குவரத்து வசதிக்காக ஏற்கனவே இரண்டாயிரம் அரச பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## அதிவேக வீதியில் விபத்து; இரு இளைஞர்கள் பலி!

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியின் ஜா எல வெளியேறும் வாயில் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மின் கம்பத்தில் மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில், ஜா எல பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 25 வயதான இருவர் பலியாகியுள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் படுகாயமடைந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜா எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)


ஈரவிழிகளுடன் 4 ஆம் ஆண்டில்

அமரர் உயர்திரு சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)



வையத்துள் 12 07 1943

தெய்வத்துள் 13 09 2012

திதி: ஆவணி திரயோதசி தேய்பிறை

நீ தந்த செல்வங்கள்
எத்திக்கும் உண்டு
நீங்காது உன்நாமம்
எம் தேயத்தில் உண்டு
தேங்காது உதிர்க்கின்ற
கண்ணீர்த்துளி கொண்டு
உன் ஆத்ம சாந்திக்காய்
அஞ்சலிக்கின்றோம்.

இல. 45/2, விசுவமடு. (இ) பாசமுடன் குடும்பத்தினர்.


## இராசி பலன்

30.08.2016
(ஆவணி 14, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 3.19 மணிவரை
பூசம் முற்பகல் 11.13 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
நல்லூர்க்கந்தன் சப்பறம்
மாலை 5 மணிக்கு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | சந் |
| | | | சூரி, புத.ராகு |
| | சனி செவ் | | குரு, சுக் |

**மீனம்** வருமானம் பெருக வழி சமைத்துக் கொள்வீர்கள், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும்.

**மேடம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் நலன் காண வேண்டிய நாள்.

**இடபம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கூடும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்,வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற் கொள்ள வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் சேரும்,பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** சுப காரியச் செலவுகள் கூடும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்பத்தில் அனைவரும் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கேட்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன்றோரின் சந்திப்புக்கள் நன்மை தரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.

**துலாம்** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த முறையில் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு







படங்கள்: உ.சாளின்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு சிறந்த முறையில் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையகத்தில் நடைபெற்றது.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்கவின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.

மேற்படி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் இருக்கும் பொலிஸ் நிலையங்களில் சிறப்பாக செயற்பட்டு குற்றங்களை கட்டுப்படுத்த உதவிய பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கஞ்சா கடத்தல்களை முறியடித்து அவற்றில் ஈடுபட்டவர்களை கைது செய்தமை, ஆலய திருவிழாக்களின் போது கொள்ளையில் ஈடுபட்டவர்களை கைது செய்தமை, வாள்வெட்டில் ஈடுபட்டவர்களை கைது செய்தமை, திருட்டுக்களை கண்டறிந்தமை,மற்றும் பல குற்றச்சாட்டுக்களுள்ளோரை கைது செய்தமை போன்றவற்றில் சிறந்த முறையில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டு, நேற்றைய தினம் கௌர விக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன, உட்பட காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட அனைத்து பொலிஸ் நிலையங்களின் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னதாக மங்கள வாத்தியங்களுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, பின்னர் மங்கள விளக்கேற்றப்பட்டு, சிறந்த முறையில் செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு, வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர், யாழ்.மாவட்ட பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர்.

இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களில் இரு பெண் பொலிஸாரும் உள்ளடங்குகின்றனர்.

சிறந்த முறையில் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களை கௌரவிப்ப தன் மூலம் அவர்களது வினைத்திறன் மிக்க சேவையை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியும்.

இதன் மூலம் வடக்கு மாகாணத்தில் குற்றங்களை கட்டுப்படுத்த அவர்கள் முன்னின்று செயற்படுவார்கள் எனவடக்குமாகாணபொலிஸ்மா அதிபர் இதன் போது தெரிவித்தார். (இ-4)

## 'இந்து ஒளி' வெளியீடு



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் இந்து ஒளி என்ற ஆன்மீக சஞ்சிகையை கடந்த 20 வருட காலமாக வெளியிட்டு வரு கிறது.

1996 நவம்பர் மாதத்தில் இந்த சஞ்சிகை அறிமுகமானது. ஆரம்பத்தில் காலாண்டிதழாக வெளியிடப்பட்டு வந்த இந்து ஒழி 2013 ஏப்ரல் மாதம் முதல் இரு மாதங்களுக்கு ஒரு தடவையாக மலரத் தொடங்கியது.

இருபதாண்டு நிறைவாக வெளிவந்திருக்கும் 2016 ஆவணி - புரட்டாதி இதழ் நல்லைக் கந்தன் மஹோற்சவ சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

இந்து ஒளி - நல்லைக் கந்தன் மஹோற்சவ சிறப்பிதழின் வெளியீட்டு விழா இம் மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் அகில இலங்கை இந்துமாமன்றஉபதலைவரும் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

இந்து ஒளி சிறப்பிதழின் முதற்பிரதியை நல்லை ஆதீன முதல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனிடமிருந்து பெற்றுக்கொண்டார். (இ-10)

## வீதி புனரமைக்கப்பட்டும் வெள்ளம் வடிந்தோடவில்லை



கரணவாய் காவில் வீதி புனரமைக்கப்பட்ட போதிலும் மழை வெள்ளம் வழிந்தோட முடியாது வீதியில் தேங்கி நிற்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக உள்ள வீதியே இவ்வாறு காணப்படுகிறது. கடந்த வருடம் இவ் வீதி புனரமைப்புச் செய்யப்பட்ட போதிலும் மழை காரணமாக ஏற்படும் வெள்ளம் வழிந்தோடுவதற்கான வழிகள் எவையும் இன்மையால் வெள்ள நீர் வீதியில் தேங்கிக் காணப்படுகிறது. (இ-60)

## கதிரைகள் கையளிப்பு



கரவெட்டி ஒன்றியத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அறுபத்து ஐந்து கதிரைகளினை வங்கியுள்ளார். வடமாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து இக் கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன. கரவெட்டி ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம் பெற்ற நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் கதிரைகளைக் கையளித்தார். (இ-60)

## யாழ். மத்திய கல்லூரி முதலாம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு முன்னோடி நிகழ்வுகளை முன்னிட்டு மூன்றாம் தவணைக்காக பாடசாலை நாளை மறுதினம் முதலாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே சகல ஆசிரியர்கள், மாணவர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

ஊர்காவற்றுறை பிரதேசசபையில் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளில் காணப்படும் நூலகப்பரிசாரகர், காரியாலய காரிய சகாயர், காவலாளி, சுகாதார தொழிலாளி ஆகிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக செப்டெம்பர் மாதம் முதலாம், 2ஆம் திகதிகளில் நடத்தப்பட இருந்த நேர்முகப்பரீட்சை, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப் பட்டுள்ளதாவும் இது தொடர்பில் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (இ)



சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான நிறுவனத்தின் ஏற்பாட்டில் "கருத்தாடலுக்கான புகைப்பட கண்காட்சி" நேற்று முன்தினம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு ஆரம்பமாகிய இந்த கண்காட்சியில் நாட்டில் உள்ள அனைத்து மதத்தினரையும் உள்ளடக்கிய 60 இற்கு மேற்பட்ட புகைப்படக்கலைஞர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக் கண்காட்சி இன்று 30 ஆம் திகதி வரை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளதாகவும் அனைவரும் வருகை தந்து பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (படங்கள்:- பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான விசாரணையை வலியுறுத்தி பிரிட்டனில் கவனயீர்ப்பு போராட்டம்





(கொழும்பு)

**காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு காணாமற்போனோர் மற்றும் முன்னாள் போராளிகள் உயிரிழப்பு குறித்து பிரித்தானியா, இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

குறித்த ஆர்ப்பாட்டம்நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 Downing street, London, SW1A2AA என்னும் இடத்தில் நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இப்போராட்டம் இடம்பெற்றது.

2009ஆம்ஆண்டுஇராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட 105க்கு மேற்பட்டவர்களது சந்தேகத்திற்கு இடமான மரணங்கள் குறித்து நம்பகத் தன்மையுடன் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் காணாமற்போனோர் பற்றிய ஆரோக்கியமான நம்பகத்தன்மையுடைய விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கைதுகள், மனித உரிமை மீறல்கள், நில அபகரிப்பு, தமிழ் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்படல் ஆகியவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தினத்தில் இதனை உலகிற்கு உரத்து கூறும் வகையிலும், பிரித்தானியா இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் இந்த போராட்டம் நடைபெற்றது. இதில் ஈழ ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7-10)


## பெயர் மாற்றம்

4 ஆம் கட்டை ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட விக்ரர் யோசப் மரியம்மா ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் மாத்திரம் சௌந்திரராணி எனப் பதியப்பட்டுள்ளது. ஏனைய ஆவணங்களில் விக்ரர் யோசப் மரியம்மா என்றே பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் விக்ரர் யோசப் மரியம்மா என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள (5759)
விக்ரர் யோசப் மரியம்மா



## பிறந்த நாள் வாழ்த்து




**பிறேமச்செல்வன் பிரதீசன்**

பிரான்ஸில் வசிக்கும் பிறேமச்செல்வன் செந்தமிழ்ச்செல்வி தம்பதியினரின் அன்பு புதல்வன் பிரதீசன் 30.08.2016 இன்று செவ்வாய்க்கிழமை தனது 16 ஆவது பிறந்த தினத்தை நல்லூரில் உள்ள அப்பம்மாவின் இல்லத்தில் மிகவும் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணா விதுஷன் அன்பு அப்பம்மா அன்னலட்சுமி, அத்தைமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார் அனைவரும் நல்லூர் முருகன் அருளால் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

(5761)

வாழ்த்துவோர்
அப்பம்மா
பத்மநாதன் அன்னலட்சுமி,
அத்தை பு.கோகுல



## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை கி.பா:19
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/கணக்காளர் டுபாய்
தொ.இ: B/6224

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 33செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6225

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 10
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:B.COM/வங்கியாளர் அவுஸ்திரேலியா
தொ.இ: B/6226

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 40 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/6227

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 48செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: G/6239

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 30 செவ் 7 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:பல் வைத்தியர் டென்மார்க்
தொ.இ: G/6240

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 27
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6242

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 17
உயரம்: 158cm
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/6244

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai jaffna@gmail.com
021 720 1005, 021 221 5434


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆண்டுகளின் பின்னர்
# ஆனையிறவு உப்பளத்தில்
# நேற்று உப்பு அறுவடை

(பரந்தன்)

**நாட்டில் இடம்பெற்று முடிந்த தொடர் யுத்தம் காரணமாக ஆனையிறவு உப்பளத் தொழிற்சாலை கடந்த 30 ஆண்டு களாக செயலிழந்த நிலையில் மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நேற்று ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை செய்யப்பட்டது.**



கடந்த 1937ஆம்ஆண்டு காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளமானது கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் மீளவும் 2004ஆம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்டு கடந்த 2008ஆம்ஆண்டு தொடர் யுத்தம் காரணமாக முற்றாக செயலிழந்த நிலையில் மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளின் பின்னர் நேற்று ஆனையிறவு உப்பளத்தில் உப்பு அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இதன் கட்டுமானப்பணிகள் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நூறு மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும் இருபத்து ஐந்து மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள். களஞ்சியம் என்பன புனரமைப்பு செய்யப்பட்டன. நேற்றைய தினமும் உப்பளத்திற்கான கட்டடத் தொகுதி ஒன்றினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன். கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உப்பு அறுவடைசெய்தல் மற்றும் அடிக்கல் நாட்டு விழா என்பவற்றில் பங்குகொண்டிருந்தனர்.

அத்துடன் உப்பள அதிகாரிகள் , ஊழியர்கள் , எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் சுமார் ஐம்பதாயிரம் மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு உள்ள அறுவடையில் முதற்கட்டமாக எண்ணாயிரம் மெற்றிக்தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உப்பளத்தில் முன்பு 650 பணியாளர்கள் பணியாற்றி இருந்த போதும் தற்போது 31 பணியாளர்களே வேலை செய்வதனை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் இயந்திர இயக்குநர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஐம்பது பேருக்கு நியமனம் வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-312)

## விவசாய நிலங்களுக்குச் செல்லுகின்ற பாதை சீரின்மையால் அவதியுறுகின்றோம்

செப்பனிடல் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்படும் என ரவிகரன் தெரிவிப்பு



கொக்குத்தொடுவாய் விவசாய நிலங்களுக்குச்செல்லும் பாதைகளின் சீரற்ற நிலைகளால் தாம் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக அம் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாய உள்ளீடுகளை கொண்டுசெல்வது முதல் அறுவடைமுடிந்து நெல் மணிகளை கொண்டுவருதல் வரையில் இப்பாதை சீர்கேட்டால் அவதியுறுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

குறித்த பாதை சீர்கேடு தொடர்பாக கொக்குத் தொடுவாய் மக்களின் முறைப்பாட்டைத்தொடர்ந்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 23 ஆம் திகதி நேரில் சென்று சுமார் பத்து கிலோமீற்றர் வரையான இப்பாதையை பார்வையிட்டார்.

அதன் பின்னர் ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்.

நீர்ப்பாசனக் காணிகள் அனைத்தும் பறிக்கப்பட்ட நிலையிலும் மானாவாரி செய்கை மேற்கொள்ளக் கூடிய நிலங்களிலும் சிங்கள மக்கள் விவசாயம் செய்து வந்தனர்.

இந்நிலையில் இம் மக்களின் விடாமுயற்சியினால் சில ஏக்கர் மானாவாரி விவசாய நிலங்களில் இவர்கள் நெற் செய்கை மேற்கொண்டு வந்தார்கள்.

2014ஆம் ஆண்டிலும் இவர்களின் மானாவாரி நிலங்களை பார்வையிடுவதற்கு இவ்வழியால் வந்தபோது முன்பிருந்ததை விட தற்போது சற்று கூடுதலாய் பாதை செப்பனிடப்பட்டுள்ளது.

மணல் இறக்கம் வரையான தூரத்துக்கான செப்பனிடல் இவ்வாண்டிலேயே மேற்கொள்ளப்படும் என எண்ணுகின்றேன்.

படிப்படியாக அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இப்பாதையின் எஞ்சிய பகுதிகள் செப்பனிடப்பட்டு சலப்பையாறு பாலமும் சீர் செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-281)






முல்லைத்தீவு மாவட்ட மாற்றுவலுவுடையோர் நிலையம். கணனி பயிற்சி நிலையம் ஆகியவற்றின் திறப்பு விழாவும் வன்னிஸ்வரம் இசைக்குழு அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது இந்நிகழ்வில் வடக்கு மாகாண போக்குவரத்து மீன்பிடி மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்துகொண்டு கணனிப்பயிற்சி நிலையத்தை திறந்து வைத்ததுடன் இசைக்குழுவையும் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். இந்த இசைக்குழு முல்லைத்தீவு மாவட்டத்தின் கலைஞர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல்

### அக்கராயனில் இன்று; வட்டக்கச்சியில் நாளை

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி சமூக சேவைகள் திணைக்களத்தினால் வீட்டுத் திட்டம் மற்றும் வாழ்வாதார திட்டங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட அக்கராயன் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியில் இருந்து அக்கராயன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

அதன்பின்னர் வட்டக்கச்சி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணியிலிருந்து வட்டக்கச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

எனவே பரிந்துரைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், இது வரை மருத்துவ சான்றிதழ் பெறாத ஏனைய பரிந்துரைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (2-277)

## அமைப்புக்கள்,கழகங்கள்,சங்கங்களை
## கணக்காய்வுக்குட்படுத்தி அறிக்கைகளை பொதுமக்களின் பார்வைக்கு வையுங்கள்

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பல அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள், இளையோர் சங்கங்கள் ஆகியன வருடக்கணக்கில் கணக்காய்விற்குட்படுத்தப்படாமல் இருப்பதாகவும் அவ்வாறானவற்றை இனங்கண்டு கணக்காய்வுகளுக்கு உட்படுத்தி அறிக்கைகளை பொதுமக்களின் பார்வைக்கு வைக்குமாறு பிரதேச மக்கள் உரிய அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த பிரதேசத்தில் காணப்படும் விளையாட்டுக்கழகங்கள், பல அமைப்புக்கள் இளையோர் சங்கங்கள் ஆகியவை கடந்த காலங்களில் பொது நிகழ்வுகளை நடத்துவதாக கூறி பிரதேச மக்களிடம் இருந்து நிதிகளை திரட்டி இருந்த போதிலும் அவை தொடர்பாக எந்தவிதமான பின்னூட்டல் தகவல்களோ அல்லது அறிக்கைகளோ குறித்த பிரதேசத்தை சேர்ந்த பொதுமக்களுக்கோ துறைசார்ந்த அதிகாரிகளுக்கோ வழங்கப்ப டுவதில்லை என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இவை தொடர்பில் கவனமெடுத்து உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-310)

## கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு


கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும். வருடாந்த பொதுக் கூட்டமும் கடந்த 25 ஆம் திகதி சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே.தபேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில். புதிய நிர்வாக தலைவராக ஆறுமுகம் சிவநேசன். செயலாளராக சிவயோகன், பொருளாளராக நெல்சன் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 8 அங்கத்துவ உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. (2-312)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எல்.எம்.ஜி.துப்பாக்கி பாகங்கள் 38 வவுனியாவில் நேற்று மீட்பு

## ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு





(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை, இறம்பைக்குளம் பகுதியில் எல்.எம்.ஜி.துப்பாக்கி பாகங்கள் 38 மீட்கப்பட்டுள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன்குமார நேற்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓமந்தை, இறம்பைக்குளம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றினை கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை துப்புரவு செய்த போது அதில் புதையுண்ட நிலையில் துப்பாக்கிகள் இருப்பதைக் கண்ட காணி உரிமையாளர் ஓமந்தைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தார். இதனையடுத்து ஓமந்தை பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் 30 எல்.எம்.ஜி.துப்பாக்கி பாகங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து அப்பகுதியில் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் எனக் கருதிய பொலிஸார் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட வவுனியா நீதிமன்றின் அனுமதியைக் கோரியிருந்தனர்,

இதற்கு வவுனியா நீதிமன்றினால் அனுமதி வழங்கப்பட்டதையடுத்து வவுனியா நீதிமன்ற பதிவாளர் எம். எஸ்.அமரட்ண முன்னிலையில் நேற்று காலை விசேட அதிரடிப்படையினரால் மீண்டும் தோண்டும் பணிகள் இடம்பெற்றது. இதன்போது 8 எல்.எம்.ஜி தப்பாக்கி பாகங்கள் மீட்கப்பட்டன.

இவ்வாறாக இவ் விடத்தில் இருந்து 38 எல்.எம்.ஜி துப்பாக்கி பாகங்கள் மீட்கப்பட்டதாக ஓமந்தை பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பகுதியில் முன்னர் இராணுவ முன்னரங்க காவல் நிலைகள் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா, ஆசிகுளம், மயிலங்குளம் பகுதியில் இருந்து 3 கிலோ எடை கொண்ட கிளைமோர் ஒன்றும் இரு கைக்குண்டுகளும் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# நல்லிணக்கத்துக்கான அமைதி பேரணியில் தமிழ்மொழி முற்றாக புறக்கணிப்பு

## கேள்விகளுக்கு பதிலளிக்க தடுமாறினர் குழுவினர்




மனிதவுரிமை அமைப்பின் ஏற்பாட்டில் யாழில் இருந்து அம்பாந்தோட்டை நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ள நல்லிணக்கத்திற்கான பாதயாத்திரையில்தமிழ்மொழிபுறக்கணிக்கப்பட்டுள்ளதாக பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழில் ஆரம்பித்த குறித்த யாத்திரை வவுனியாவை வந்தடைந்தது. எதிர் வரும் 7 ஆம் திகதி அம்பாந்தோட்டையை சென்றடைந்து அங்கு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக நிகழ்வு ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் எற்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளவர்கள் அணிந்துள்ள ரீசேட்டில் தமிழ் மொழி முற்றாக புறக்கணிகப்பட்டு சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே நல்லிணக்க பாதயாத்திரை தொடர்பில் எழுதப்பட்டுள்ளது. அதேபோல், பாத யாத்திரையுடன் இணைந்து 7 வாகனங்கள் பாதயாத்திரை குறித்த படங்கள், தகவல்களை காட்சிப்படுத்தியவாறு செல்கின்ற போதும் அதில் ஒரு வாகனத்தில்மட்டுமேதமிழ் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றைய வாகனங்களில் சிங்கள மொழி மட்டுமே பயன்படுத்தப்பட்டுளளது.

பாத யாத்திரையை வட பகுதியில் ஆரம்பித்துள்ள போதும் வடபகுதி மக்களின் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதே, மும்மொழிக் கொள்கை உள்ள நிலையில் தமிழ் மொழியை மட்டும் புறக்கணித்துள்ளீர்கள். இப்படி செய்தால் நல்லிணக்கம் வருமா..?, மனிதவுரிமை அமைப்புக் கூடதமிழ்மொழியை புறக்கணித்து நல்லிணக்க நடவடிக்கையை செய்தால் அரசியல்வாதிகளிடம் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்..? என பல வினாக்களை வவுனியா ஊடகவியலாளர்கள்பாதயாத்திரையில்ஈடுபட்டவர்களிடம் வினவினர்.

இதற்கு அவர்கள் பதில் அளிக்க முடியாது தடுமாறியதுடன் இறுதி நாள் அம்பாந்தோட்டையில்வந்து பாருங்கள். அங்கு தமிழ் மொழி இருக்கும் எனப் பதில் அளித்தனர். (2-250)

# நிரந்தரமாக ஒரு இடத்தில் இயங்காத மத்தியஸ்தர் சபையினால் மக்கள் பிணக்குகளை தீர்ப்பதற்கு அவதி

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி மத்தியஸ்தர் சபை ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இடத்தில் இயங்குவதனால் தங்களுடைய பிணக்குகளை தீர்க்க முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக பாதிக்கப்பட்ட பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் கரைச்சி மத்தியஸ்தர் சபை செயற்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் சில காலம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் பின்னர் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திலும், இயங்கிய மத்தியஸ்தர் சபை, பின்னர் மீண்டும் தற்போது கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது.

இந்த மாதத்துடன் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் செயற்படுவதற்கு பாடசாலை நிர்வாகம் மறுப்புத் தெரிவித்த நிலையில் தற்போது தற்காலிகமாக கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள ஆனந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு மத்தியஸ்தர் சபை ஒவ்வொரு இடங்களிலும் மாறி மாறி செயற்படுவது பொது மக்களை பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

குறிப்பாக முதியவர்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். எனவே கிளிநொச்சி கரைச்சி மத்தியஸ்தர் சபை நிரந்தரமாக ஒரு இடத்தில் இயங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-312)

# நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் பகுதியிலுள்ள பெரும்பாலான வீடுகளில்நீர் இறைக்கும்மோட்டர்கள்,நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருடர்களால் களவாடப்பட்டு வருவதாக வீட்டு உரிமையாளர்களினால் கிளிநொச்சி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கனகபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் உரிமையாளர் நள்ளிரவு 12மணிவரை தமது தோட்டத்தில் நீர் இறைக்கும் மோட்டர் மூலம் இறைப்பில் ஈடுபட்டுள்ளார்.

அதற்கு முன்னதாக மோட்டர் இயங்க மறுத்த நிலையில் நீர் இறைக்கும் இயந்திரம் மூலமாக இறைப்பினை மேற்கொண்டு விட்டு அதனை வீட்டின் பின்பக்கமாக வைத்துள்ளார். இதனை அவதானித்திருந்த திருடர்கள் தமது திருட்டு வேலையை கச்சிதமாகச் செய்து முடித்துள்ளனர். நீர் இறைக்கும் மோட்டர், நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியன இரண்டும் ஒரே நேரத்தில் களவாடப்பட்டுள்ளன.

இதேநாளன்று இப் பாடசாலைச் சுற்றாடலை அண்மித்த நான்கு வீடுகளில் இத் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

திட்டமிட்ட முறையில் இங்கு மட்டுமன்றி கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் மோட்டர்கள் திருட்டுப்போகும் சம்பவங்களைத் தடுத்து தமது வாழ்வாதாரத் தேவைக்கான பொருட்களைப் பாதுகாத்து உதவ சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமெனப் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (2-254)




# பூநகரி,பளை ஆகிய பகுதிகளில் 250 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை

## பயனாளிகளுக்கு கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி,பளை ஆகிய பகுதிகளில் 250 ஏக்கர் நிலப் பரப்பில் மரமுந்திரிகை செய்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

இலங்கையில் வருமானம் தரக்கூடிய பயிர்ச் செய்கைகளில் ஒன்றாகக் காணப்படும் மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி ஆகிய பகுதிகளில் இதனை ஊக்குவிக்கும் வகையில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் மர முந்திரிகை செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இச்செய்கைக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மானிய அடிப்படையில் மர முந்திரிகை கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகூடிய வருமானம் தரக்கூடியதும் போட்டித்தன்மையில்லாத ஒரு பயிர்ச்செய்கையாகவும் காணப்படுகின்ற இச்செய்கையை ஊக்குவிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாவட்ட விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-15)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான நேர்முகத்தேர்வு நாளை கிளிநொச்சியில்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) கிளிநொச்சி மாவட்டப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றுவரும் தேசிய தொழிற்றகமை தராதரம் (NVQ) மட்டம் -04 ற்கான கீழ்வரும் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகளிற்கான நேர்முகத் தேர்வானது நாளை (புதன்கிழமை) காலை 9 மணிக்கு ஆனந்தபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ளமாவட்டக்காரியாலயத்தில் இடம்பெறவுள்ள தாக மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இம்முழு நேரக் கற்கை நெறிகளாக தகவல் தொடர்பாடல்தொழில் நுட்பம்- ஒரு வருடம், தன்னியக்க வாகன திருத்துநர் (2 வருடங்கள்) , இலத்திரனியல் கற்கை நெறி (2 வருடங்கள்), மின்னியலாளர்- (1/2 வருடங்கள்) ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இம் முழுநேரக் கற்கை நெறிகளை பயில விரும்பும் 16 வயதுக்கும் 36 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள், தங்களது கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் , பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் , தேசிய அடையாள அட்டை போன்றஆவணங்களின்மூலப் பிரதிமற்றும்நிழற்பிரதிகள்என்பவற்றுடன் நேரில் வருகை தருமாறு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அறியத்தருகின்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பான் கீ மூனிடம் நாமல் கோரிக்கை

## அபிவிருத்திகளையும் கருத்தில் கொள்ளவும்

இலங்கை வரும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆறு வருடங்களில் வடக்கு கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் மேற்கொண்டுள்ள அபிவிருத்தி பணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நாளை 31 ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில் அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இரண்டாவது தடவையாக தற்போது இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். 2009ஆம் ஆண்டு 22 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்த பான் கீ மூன் அப்போது யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கான வாய்ப்புக்கள் இருந்திருக்கவில்லை. வவுனியாவில் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்களை பார்வையிட்டுச் சென்றிருந்தார்.

அதன் பின்னர் ஆறு வருடங்களில் அப்போதைய அரசாங்கம் இம்மக்களின் மீள் குடியேற்றம், வாழ்வாதார மேம்பாடு போன்ற விடயங்களில் அதீத கவனம் எடுத்திருந்தது. அத்தோடு கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தியது. வீதிகள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள், நிறுவனங்களின் மீள் நிர்மாணத்திற்கு பாரியளவில் செலவீனங்களை செய்தது.

ஒரு சமூகம் அன்றாட வாழ்க்கையை சுமுகமாக கொண்டு செல்வதற்கு இயலாத சூழலில் நாம் நல்லிணக்கம், சகவாழ்வு பற்றி கலந்துரையாடுவதென்பது பயனற்றவிடயமாகும். ஆகவே தான் நாம் முதலில் அபிவிருத்திகளின் ஊடாக வடக்கு மாகாணத்தின் உட்கட்டமைப்பு, வடக்கு மக்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றை ஏனைய மாகாணங்களுக்கும் மக்களுக்கும் நிகராக முன்னேற்றுவது என்ற கருதுகோளை முன்னிலைப்படுத்தி எமது செயற்பாடுகளை முன்னெடுத்தோம்.

ஜனவரி எட்டாம் திகதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை திசைதிருப்பி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். புதிய அரசாங்கம் உருவாகி ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. வடக்கு கிழக்கில் எவ்விதமான முன்னேற்றகரமான செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை நிறைவு செய்துவிட்டு தேசிய நல்லிணக்கம் சகவாழ்வு என பேச்சளவில் மட்டும் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் இனங்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதே யதார்த்தமான விடயமாகும். எவ்வாறாயினும் தற்போது தேசிய நல்லிணக்கம், சகவாழ்வு தொடர்பிலான நிலைமைகளை அவதானிப்பதற்காக வருகை தரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொடிய யுத்தம் நடைபெற்ற இடங்களில் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னரான ஆறு ஆண்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)




# வேகமான உணவு

இன்றைய உலகம் மிக வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கிறது. கணனி, விஞ்ஞான,தொழில்நுட்பம், அறிவியல் உச்ச வளர்ச்சி கண்டிருப்பதால் நமது உணவு வகைகளும் பல்வேறு வகையான மாற்ற ங்களை கண்டிருப்பது இயல்பாகிவிட்டது. இன்றைய அதி வேக உலகமயமாக்கலுடன் மனிதன் போட்டிபோட்டு தன் வாழ்க்கையை ஓட்டிச்செல்லும் நியதிக்கு ஆளாகியுள்ளான். காலச் சுழற்சியில் நமது உணவுப்பழக்கங்களும் பல மாற்றங்களை கண்டு வருகின்றன.

இன்றைய மனிதன் மிகவும வேகமாக இயங்க வேணடிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால் அதிகமானவர்கள் இந்த (Fast Food) வேக உணவுகளுக்கு அடிமைகளாக மாறியிருப்பது காலத்தின் நியதியாகி விட்டது. இந்த வேக உணவு முறை அதாவது தெருக்களிலும் சிற்றொழுங்கைகளிலும் உணவைக்கொண்டு சென்று சுடச்சுட விற்பனை செய்யும் முறையானது 1920ம் ஆண்டளவில் அமெரிக்கா-நியூயோர்க் நகரிலுள்ள கிறீன்வீச் என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது ஆனால் நமதுஉணவு, பலகாரவகைகளைப் பொறுத்த அளவில் அதாவது பிட்டு, இடியப்பம், அப்பம், தோசை, சிற்றுண்டிகள், பாண் போன்ற உணவுப் பொருட்கள் தெருத்தெருவாக, வீடுவீடாகக்கொண்டு சென்று விற்பனை செய்யும் முறை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்று ஒருவராலும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது.



ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களிலுள்ள நாடுகளைப் பொறுத்த அளவில் பல்வேறுபட்ட சிற்றுண்டிகள், உணவுவகைகள், (Fast Food) வேக உணவு களாக விற்பனை செய்யப்படுகின்றன. "மைக்டொனால்ட்". "பேகர்கிங்" போனற கடைகளில் பல்வேறுபட்ட வேக உணவு வகைகள் விற்பனையாகி வருடாவருடம் இத்தாபனங்கள் கோடி கோடியாகப் பணத்தைச் சம்பாதித்து இன்று உலகின் முன்னணி வியாபார தாபனங்களாகக் கொடிகட்டிப் பறக்கின்றன. அந்த அளவுக்கு இந்த வேக உணவுகளின் விற்பனை உலகில் பெருகிவிட்டன.

(Hot dog) "கொற்டொக்" என்பது பன்றி இறைச்சியை அரைத்துச் செய்யப்படும் ஒருவகை உணவாகும். இதைப் பொரித்து அல்லது அவித்து அல்லது நெருப்பில வாட்டி, சுட்டு பாண் துண்டுகளில் வைத்து கிறீம் பூசி உண்பார்கள்.இந்த உணவு இந்த நாடுகளைச் சேர்ந்த சிறியோர் முதல் பெரியோர் வரை விரும்பி உண்ணும் உணவுகளில் ஒன்றாக விளங்குகின்றது. விலையும் சற்று குறைவு.இலகுவாக உண்ணக்கூடிய உணவாகும். அதாவது நடந்துகொண்டும் இருந்து கொண்டும் ஓடிக்கொண்டும் உண்ணக்கூடிய இலகுவான உணவாகக் காணப்படுவதால் நேரத்தை மீதப்படுத்துவதாகவும் இந்த உணவு ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய மனிதருக்கு உதவுவதாக நம்பப்படுகின்றது.

மனிதர்கள் தம் வாழ்வில் பல ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள், சாதனைகள் செய்து அதிசயிக்க வைக்கும் நிகழ்வுகளும் இப்பூமிப்பந்தில் நிகழ்ந்துகொண்டு இருக்கையில் உணவு உண்பதிலும் பல சாதனைகள் நிலைநாட்டப்படுகின்றன.

கடந்த 2012ம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த சொன்யா தோமஸ் என்ற பெண்மணி 10 நிமிடங்களில் 45 Hotdog என்ற உணவை உண்டு உலக சாதனை படைத்து உலக சாதனைப்புத்தகத்தில் இடம் பிடித்திருந்தார். ஆனால் இதை முறியடித்துப் புதிய சாதனை படைத்துள்ளார் அமெரிக்க நாட்டவரானJoey Chesnut என்பவர். இவர் 10 நிமிடங்களில் 69 Hot dog உணவை உண்டு புதிய சாதனை படைத்து உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

இந்த 69 துண்டுகளும் வயிற்றில் சேரும்போது அவர் என்ன பாடுபட்டிருப்பார். இது என்ன வயிறா?... அல்லது பங்களா விரிகுடாவா?... நம்ம நாடுகளில் இப்படிச் சாப்பாட்டுப் பிரியர்களை "சாப்பாட்டு ராமர்கள்" என்று கூறுவார்கள். சும்மா இலேசுப்பட்டவர்கள் அல்லர் நம்மவர். சிலர் நான்கு ஐந்து கோப்பை சோறு உண்பவர்களும் உண்டு தான்.

இந்த உணவு வகைகளை வைத்து இன்னொரு சாதனையும் படைக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இந்தக் Hotdog உணவின் நீளம் 15 - 20செ.மீற்றர் வரை தான் இருக்கும். ஆனால் 203.8 மீற்றர் நீளமான Hotdog ஐ தயாரித்த ஒரு குழுவினர் ஒரு புதிய உலக சாதனையைப் படைத்துள்ளனர்.

மத்திய அமெரிக்க நாடான "பராகுவே" நாட்டிலுள்ள பண்ணையாளர்களும் தோட்டக்காரர்களும் ஒன்று சேர்ந்து இச்சாதனையை நிலை நாட்டியுள்ளனர். இவர்களும் இச்சாதனை மூலம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துக் கொண்டுள்ளனர்.

இன்று தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் உலக நாடுகளில் இந்தப் Fast Food உணவு வகைகளால் நன்மைகள் பெற்றாலும் தீமைகள்தான் அதிகமாகச் சேர்த்துக் கொண்டுள்ளனர். உதாரணத்திற்கு தாயும் தந்தையும் வேலை..வேலை என ஓடிக்கொண்டிருக்க பிள்ளைகள்வேக உணவுகளை கடைகளில் வேண்டி உண்ணப் பழகிவிட்டார்கள். இதனால் பலர் இதற்கு அடிமையாகி விட்டனர். இன்னும் சிலர் தமது வீடுகளில் சமையல் வேலை செய்து சாப்பிடாமல் எப்போதும் வேக உணவுகளை வேண்டி குளிர்சாதனப்பெட்டிகளில் மாதக்கணக்கில்அடுக்கி வைத்துவிட்டு அவ்வப்போது எடுத்துச் சூடாக்கி உண்டு மகிழ்கிறார்கள். இன்னும் சிலர் தமது வீடு மணக்கும், வீடு பழுதாகிப் போய் அழகு கெட்டுவிடும் எனபதற்காக சமையலே செயயாமல் கடைகளில் இந்த வேக உணவுகளை வேண்டி உண்டு காலத்தைக் கழிக்கிறார்கள். இப்படி எத்தனையோ வகையினர் இருக்கிறார்கள். இதனபக்கவிளைவுகள் அதிகம். பல சிறுவர்கள் சிறுவயதிலேயே அளவுக்குஅதிகமாக உடற்பருமன்கூடி நடக்க முடியாமல், இருக்கமுடியாமல் அவதிப்படுவதுடன் சிறுவயதிலேயே கொழுப்பு நோய், நீரழிவுநோய்,இரத்தஅமுத்தம் போன்ற பல வியாதிகளுக்கு ஆளாகிவருகிறார்கள்.இப்படியானவர்களின் எணணிக்கை நாளுக்கு நாள பெருகி வருகின்றமையை நாம் புரிந்துகொள்வதில்லை. இதைவிட இளையோரும் ஏன் குடும்பத்தவர்களும் இந்த வேக உணவுகளை அளவுக்கு அதிகமாக உணடு அளவுக்கு அதிகமாக உடல் பருதது நோயாளிகளாகி விரைவான காலத்திலேயே தமது ஆயுளை முடித்து விடுகிறார்கள். இதுமட்டுமல்லாமல் இவர்களின் வைத்தியச் செலவுகளை ஈடுசெய்வதற்குப் பெருநதொகை யான பணமும் விரயமாகின்றன.





இப்பணத்தை வேறு முதலீடுகளில் ஈடுபடுத்தினால் செல்வம் எவ்வளவு பெருகும். இன்று உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் உடற்பருமன் பிரச்சினையும் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வ.சிவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தெய்வீகச் சொற்பொழிவு" சப்பறத் திருவிழாவான இன்று மாலை 6 மணிக்கு நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம் பெறும். இதில் சைவப்புலவர் நித்தியா தசிதரன் "பேசா அநுபூதி" எனும் தலைப்பில் சொற் பொழிவாற்றுவார். (இ-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க்கந்த சுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று செவ்வாய்க்கிழமை "கலியுகத்தில் கந்தன்" பற்றிஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் கு.சரவணபவானந்தம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறிவிழா இன்றும் பி.ப.3மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்வார். ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திரு விழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணிவரை நடத்தி வரும் "தெய்வீக இசைச் சங்கமத்தில்" இன்று செவ்வாய்க் கிழமை பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா குழுவினரின் பக்தி இசை நிகழ்ச்சி இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை பாட்டு- ஏ.கே.கருணாகரன், வயலின்- கே.குகபரன், மிருதங்கம்-பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தர சர்மா, கெஞ்சிரா- எஸ்.செந்தூரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'வீஷ்மர் யுத்தம்'

நல்லூர்க்கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை நடத்தி வரும் "தெய்வீகத் தொடர் இசைப்பேருரை" நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்று வருகின்றது. இந்நிகழ்வில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதியின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை "வீஷ்மர் யுத்தம்" பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் "ஆன்மீக அருளுரை" (ஞானயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இரவு 7.15 மணி முதல் 8 மணிவரை இடம்பெறும். இந்நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை கண்டி வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி கார்த்திக் சைதன்யா "சுதந்திரமும் உரிமையும்" எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை வழங்குவார். இ-3







யாழ்.கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தின் ஏழாவது குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் பத்தாவது குருபூசை தினத்தை முன்னிட்டு அண்மையில் வேதாந்த மடத்தில் இடம்பெற்ற இரத்ததானமுகாம் .மரநடுகை நிகழ்வுகள் என்பனவற்றைப் படங்களில் காணலாம்.

## தேவாரப்பண் இன்னிசைக்கோஷ்டி

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் நல்லைக்கந்தன் மஹோற்சவ தீர்த்தத் திருவிழாவன்று நடத்தி வரும் தேவாரப்பண் இன்னிசைக்கோஷ்டி நாளைமறுதினம் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு கலாபூஷணம் துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திகள் தலைமையில் தேரடியிலிருந்து ஆரம்பமாகி வீதி உலாவாக நடைபெறும்.

திருமுறைப்பண்ணிசையில் ஆர்வமுள்ளவர்கள், ஓதுவார் மூர்த்திகள், மாணவர்கள் அனைவரும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (இ

## பிரசாரகர்களுக்கான பயிற்சிக் கற்கை நெறி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக பிரசாரகர்களுக்கான பயிற்சிக் கற்கை நெறி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி காலை 9.30மணியளவில்குருகுலம்பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திஎனும்முகவரியில்இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளும் சிறப்புரையினை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், யாழ்.பல்கலைக்கழக [illegible] செல்வநாயகம் [illegible] (இ-3)

## நல்லூரானுக்கு இன்று சப்பறத்திருவிழா



## நல்லாட்சி

கூற்றினுங் கொடியரோ வாதிகள்
நாட்டின் நடத்தையை மாற்றிடும் பீதிகள்
அரசியல் வேண்டும் நீதிகள்
எம் நாட்டினில் ஒழிப்போம் சாதிகள்
வாழ்க்கையைக் கெடுக்கும் பாவிகள்
அதில் சிக்குவோர் அப்பாவிகள்
வரம் பெற்ற இராவணனின்
சிரம் கொய்த இராமன்
மீண்டும் தோன்றுவரோ பூமியில்
நல்லாட்சி நடத்துவரோ நாளை

-அ.அச்சுதன், கோண்டாவில்

## நல்லூர்க்கந்தனுக்கு அரோகரா!

தேவர்களின் சேனாதிபதி நீ எமை தேடி வந்தமர்ந்தாய்
நல்லையம்பதியில்-தேவ மங்கை தெய்வயானை
ஒருபுறம் இருக்க மலைமகளாம் உன் மனதிற்கினிய
வள்ளி மகள் மறுபுறம் இருக்க நீ நல்லாட்சி புரியும்
அழகைக் காண ஓடோடி வந்தோம் ஐயா பக்தர் நாம்
நலம் பல பெற்றிட வேண்டும் நற் தமிழ் தழைத்திட
வேண்டுமென்று நீ அருள்புரிய வேண்டி
மனந்திறந்து சொல்கிறோம் நல்லூர்க்கந்தனுக்கு அரோகரா

-வி.சுகன்யா, கோப்பாய்.

## தமிழர் படும் துன்பங்கள் தீராயோ

நாரணன் மருகா நல்லையின் நாயகா
ஆறணி சடையான் அம்பலக் கூத்தன் மைந்தா
பூரணியின் பாலகா பூவிலுதித்த பேரழகா
தரணியில் தமிழ்பாடு துன்பங்கள் தீராயோ
அணி சேர்ந்தே அடியார் அரோகரா என்றிடவே
கணிப்புடனே கலைவல்லார் கானங்கள் இசைத்திடவே
மணியுடனே மங்கள நாதம் ஒலிக்க மயில் மீது முருகன்
பிணி தீர்த்தே பக்தருக்குப் பேரருள் தர வருகிறான் நல்லையிலே

-விசாகஜன், தென்கோவை

## உள்ளம் கவர்ந்தவனோ

பல்லவி

கந்தன் நாமத்தைக் கேட்டவுடன் -என்
கண்கள் மயக்கம் கொள்ளுதடி

அனுபல்லவி

கண்கள் அவனைச் சங்கமிக்க-என்னை
அறியாமல் கால்கள் ஓடுதடி

சரணம்

காதல் மன்னனோ நல்லூர்க்கந்தன்-என்
உள்ளம் கவர்ந்தவனோ மயில் வேல் முருகன்
ஓடித்திரியும் காலடி வீதியில் -என்
கையை பிடித்தவன் நடப்பானோ
அன்பே என்று நான் மெய்யுருக என்
நிலைகண்டு மகிழ்ச்சியில் திளைப்பானோ

-மலர் சின்னையா, நல்லூர்

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

அற்புதம் மின்னிடுஞ் சப்பறத் தேரிலே
அணியார மாடவருவாய்
பொற்பதம் போற்றிடக் கற்பகத் தருவாகப்
பொங்கியே யெங்குமருள்வாய்
சொற்பதங் கண்டுகவி சொல்லிட வெனக்குமொரு
சுவைபடச் சந்தமிடுவாய்
நற்பதங் காட்டியெமை நல்லபடி வாழ்விக்கும்
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் துருக்கி விமானப்படைகள் குண்டுத்தாக்குதல்





## 65 பேர் பலி!

(டமாஸ்கஸ்)

**துருக்கி நாட்டு விமானப்படையின் துணையுடன் அந்நாட்டு பீரங்கி வாகனங்கள் சிரியாவுக்குள் நடத்தி வரும் ஆவேசத்தாக்குதலில் 25 தீவிரவாதிகளும் அப்பாவிப் பொதுமக்கள் 40 பேரும் பலியானதாகத் தெரியவந்துள்ளது.**

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவுக்குள் இருந்தபடி துருக்கி எல்லையில் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் முதல்முயற்சியாக துருக்கி நாட்டு இராணுவ டாங்கிகள் சிரியாவுக்குள் அத்துமீறி நுழைந்து ஆவேச தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அவ்வகையில், சிரியாவின் ஜராபுலுஸ் நகரின் தெற்கேயுள்ள ஜெப் எல்-குஸ்ஸா கிராமப் பகுதியில் துருக்கி நாட்டு விமானப் படைகளும், பீரங்கி வாகனங்களும் நேற்று முன்தினம்நடத்திய ஆவேசத்தாக்குதலில் பொதுமக்களில் 20 இற்கும் அதிகமானவர்கள் பலியானதாகவும் சுமார் 50 பேர் காயமடைந்ததாகவும் சிரியா நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துருக்கி படைகளின் தாக்குதலில் 25 குர்திஷ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக துருக்கிஇராணுவம்வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், அல்-அமர்னே நகரிலும் துருக்கிப் படைகள் நடத்திய தாக்குதலில் 20 பேர் உயிரிழந்ததாகவும் 25 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் மட்டும் பொதுமக்களில் சுமார் 70 பேர் பலியானதாக குர்த் இனத்தை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் தெரிவித்துள்ள நிலையில் அரசின் அதிகாரபூர்வ எண்ணிக்கை 40 ஆகவே காணப்படுகிறது.

இதற்கிடையில், துருக்கி நாட்டு இராணுவ டாங்கிகள்மீது சிரியாவில் உள்ள குர்திஷ் போராளிகள் ரொக்கெட்களை வீசி நடத்திய தாக்குதலில் எர்கான் செலிக் என்ற இராணுவ வீரர் உயிரிழந்ததாக துருக்கி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


தொடர்ந்து சிரியா எல்லையில் உள்ள கிராமப்புறங்களை நோக்கி முன்னேறிவரும் துருக்கி படைகளின் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என உள்ளூர் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (இ-7)

## இராணுவ முகாம்மீது தற்கொலைத்தாக்குதல்

### 60 பேர் உயிரிழப்பு

(சனா)

ஏமன் நாட்டின் ஏடன் துறைமுக நகரில் உள்ள இராணுவ முகாம் மீது தற்கொலைப்படை தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் 60 பேர் பலியாகியுள்ளனர். ஏமன் நாட்டில் உள்ள துறைமுக நகரமான ஏடனில் உள்ள இராணுவ முகாமில் நேற்றுக் காலை இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு முகாம் நடைபெற்றது.



இந்த ஆட்சேர்ப்பு முகாமின் வாசலில் பலர் வரிசையில் காத்திருந்தபோது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரில் வந்த ஒரு தீவிரவாதி, அந்தக் காரை வெடித்துச் சிதற வைத்தான்.

இந்தக் கொடூரத் தாக்குதலில் 60 இற்கும் அதிகமானவர்கள் பலியானதாகவும், காயமடைந்த பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

கடந்த 18 மாதங்களாக ஏமனில் நடந்துவரும் தீவிரவாத தாக்குதல்களில் சுமார் 7 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

இங்கு வாழும் சுமார் 80 சதவீதம் மக்கள் அடிப்படை தேவைகளான குடிநீர், உணவு, உடைகள் மற்றும் மருத்துவ வசதி கிடைக்காமல் திண்டாடி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இந்திய தேசியக்கொடியுடன் ஜேர்மனியில் மக்கள் பேரணி

ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ள பலுசிஸ்தான் மக்கள் இந்திய தேசியக் கொடியை ஏந்தியும், இந்திய பிரதமர் மோடிக்கு ஆதரவாகவும் பேரணி நடத்தியுள்ளார்கள்.



இது பாகிஸ்தானுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தில் மக்களை அந்நாட்டு இராணுவம் ஒடுக்கி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிலையில் அண்மையில் நடந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "பலுசிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் பொது மக்களுக்கு எதிராக அடக்குமுறைகளில் ஈடுபட்டு வரும் பாகிஸ்தான், உலகத்துக்கு பதில் சொல்லும் நாள் வந்துவிட்டது.

பலுசிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மனித உரிமை மீறல்கள் நடந்து வருகின்றன. உரிமைகளுக்காக போராடுபவர்களுக்கு இந்தியா ஆதரவு தரும்" என்று பேசினார்.

பிரதமர் மோடியின் பேச்சுக்கு நாடு கடத்தப்பட்ட பலுசிஸ்தான் தலைவர்கள் வரவேற்பு தெரிவித்தனர். இந்நிலையில் ஜேர்மனியில் தஞ்சம் புகுந்த பலுசிஸ்தான் மக்கள் லெப்சிக் பகுதியில் நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு எதிராக கண்டனம் தெரிவித்து பேரணி நடத்தினார்கள்.

இந்திய தேசிய கொடிகளை கையில் ஏந்தியபடி போராட்டத்தில் அவர்கள் பங்கேற்றனர். மேலும் பாகிஸ்தானுக்கு எதிராகவும், பிரதமர் மோடியை வாழ்த்தியும் அவர்கள் கோஷங்களை எழுப்பினார்கள்.

பேரணியில் பங்கேற்ற பலுசிஸ்தான் நாட்டை சேர்ந்த ஒருவர் கூறுகையில், " நாங்கள் இந்திய பிரதமர் மோடியை மதிக்கின்றோம். அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அவர் பாகிஸ்தானை போல் அல்லாமல் எங்களை மனித நேயத்துடன் அணுகுகிறார் என்றார்.

இதேபோல்பேரணியில்பங்கேற்ற மற்றொருவர் கூறுகையில், "எங்களுக்கு சுதந்திரமான பலுசிஸ்தான் வேண்டும்" என்று தெரிவித்தார். (இ-7)

## காவிரியில் தண்ணீர் திறக்கக் கோரி

# தமிழகத்தில் முழு அடைப்பு

### 1000 இடங்களில் மறியல் போராட்டம்

காவிரியில் தண்ணீர் திறக்கக்கோரி தமிழகத்தில் இன்று முழு அடைப்பு போராட்டம் நடைபெறுகிறது. 1000 இடங்களில் வீதி மறியல் போராட்டமும், மாவட்ட தலை நகரங்கள் உட்பட 100 இடங்களில் புகையிரத மறியல் போராட்டமும் நடைபெறுகிறது.

தமிழகத்துக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் நீண்ட காலமாக காவிரி நதி நீர் பிரச்சினை இருந்து வருகிறது.

காவிரியில் தமிழகத்துக்கு உரிய பங்கை பெற முடியாததால் தமிழக அரசு சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

ஆனால் ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்துக்கு தர வேண்டிய காவிரி நீரை தர மறுத்து கர்நாடகா பிடிவாதம் காட்டி வருகிறது.

தமிழகத்துக்கு கர்நாடக அரசு இந்த ஆண்டில் ஜூன் முதல் ஓகஸ்ட் வரை 3 மாதத்திற்குள் 94 டி.எம்.சி. தண்ணீரை தர வேண்டும்.

ஆனால் கடந்த மாதம் 26 ஆம் திகதி வரையில் சுமார் 23 டி.எம்.சி. அளவுக்கே தண்ணீர் கொடுத்து உள்ளது. மீதம் உள்ள 71 டி.எம்.சி. தண்ணீரை கொடுத்தால் மட்டுமே டெல்டா மாவட்டங்களில் 12 இலட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடியை தொடங்கலாம் என்கிற நிலையுள்ளது.

ஆனால் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடாமல் கர்நாடக அரசு ஏமாற்றி வருகிறது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கர்நாடக அரசு ஓகஸ்ட் மாதம் திறந்து விட வேண்டிய 50 டி.எம்.சி. தண்ணீரை உடனடியாக திறந்து விடக்கோரி தமிழக அரசு உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனு எதிர்வரும் 2 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

இந்த வழக்கை சட்ட ரீதியாக சந்திக்க போவதாகவும், தமிழகத்திற்கு தற்போது தண்ணீர் திறந்து விட வாய்ப்பு இல்லை எனவும் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்து விட்டார்.

இந்நிலையில் சம்பா சாகுபடியை தொடங்குவதற்கு ஏதுவாக காவிரியில் தண்ணீர் திறந்து விட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கக்கோரி விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் இன்று தமிழகத்தில் முழு அடைப்பு போராட்டம் நடைபெறவுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவை விடாது துரத்தும் இயற்கைப் பேரிடர்

# ஆயிரம் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின

## 300 பேர் இதுவரை பலி!

**(பாட்னா)**

**கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சுமார் ஆயிரம் கிராமங்கள் மூழ்கியுள்ளன. இலட்சக் கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். அதேவேளை 300 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.**





இந்தியாவின் வடமாநிலங்களில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் கங்கை உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் கரைகளை உடைத்து கொண்டு கிராமங்களுக்குள் புகுந்துள்ளதால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பீகாரில் ஓடும் கங்கை உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் அபாயக்கட்டத்தை தாண்டி ஓடுகிறது. இதில் 12 மாவட்டங்களை சேர்ந்த 1000 இற்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மீட்பு மற்றும் நிவாரண உதவிகளை மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் வழங்கி வருவதாக மத்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி பிரசாத் தமது தந்தையான லாலு பிரசாத்துடன் வெள்ளம் பாதித்த இடங்களை விமானம் மூலம் ஆய்வு செய்தார்.

மேலும் உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தரகண்ட் மாநிலத்திலும் மழை வெள்ளத்தால் வீடுகளை இழந்து தவிக்கும் பல இலட்சம் மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மாநிலங்களில் மழை, வெள்ளம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300 ஐ தாண்டியுள்ளது. (இ-7-10)

## பயங்கரவாதத்தை வேரோடு பிடுங்கி எறியும் வரை போராட்டம் தொடரும்

### துருக்கி ஜனாதிபதி அறிவிப்பு



பயங்கரவாத அமைப்பினை வேரோடு பிடுங்கி எறியும் வரை தமது போராட்டம் தொடரும் என துருக்கி ஜனாதிபதி தயீப் ஏர்துவான் தெரிவித்துள்ளார்.

துருக்கியில் திருமண வைபவத்தில் இஸ்லாமிய தீவிரவாதி ஒருவனால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 54 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்ற காஜியண்டெப் நகரில் பெருமளவு ஆதரவாளர்கள் முன்னிலையில் உரையாற்றிய போதே தயீப் ஏர்துவான் இதனை தெரிவித்துள்ளார்.

சிரியாவில் இஸ்லாமிய அரசு கட்டுப்பாட்டு பகுதிகளில் இடம்பெற்றுவரும் மோதல் குறித்து கருத்து தெரிவித்த ஏர்துவான்,' ஈராக் மற்றும் சிரியாவில் நிலை கொண்டுள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளை அகற்றுவதற்கு எமது முழுமையான ஆதரவினை வழங்குவோம். தேவை ஏற்பட்டால் ஏனைய பகுதிகளிலும். பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதை தவிர்க்கமாட்டோம். பயங்கரவாத அமைப்பினை வேரோடு பிடுங்கி எறியும் வரை எமது போராட்டம் தொடரும்' என்று தெரிவித்தார்.

மேலும், ஜராப்ளஸ் பகுதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் மோதல்களினால் அங்கிருந்து வெளியேறியுள்ள பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் எனவும் அவர்கள் அனைவரும் மீண்டும் தமது இடங்களுக்கு செல்வதற்கு அனைத்து வகையான ஆதரவுகளையும் வழங்குவதுடன் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பிரதமர் மோடி 3 நாள் வெளிநாடு பயணம்

### சீனா,வியட்நாம் செல்கிறார்

(டில்லி)

பிரதமர் மோடி செப்டெம்பர் 3ஆம் திகதி தனி விமானத்தில் டில்லியில் இருந்து சீனா புறப்படுகிறார். சீனா செல்லும் வழியில் வியட்நாம் நாட்டுக்கு பிரதமர் மோடி செல்கிறார்.

சீனாவில் எதிர்வரும் 4,5 ஆம் திகதிகளில் 11ஆவது ஜி.20 மாநாடு நடக்கிறது. ஜிஜியாங் மாகாணம் ஹாங்சூவு நகரில் நடைபெறும்.

இந்த மாநாட்டில் பிரதமர் மோடி மற்றும் ஜி. 20 கூட்டமைப்பில் உள்ள நாட்டு தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

இதில் இதற்கு முன் நடந்த மாநாட்டில் எழுப்பப்பட்ட சர்வதேச அரசியல் விவகாரங்கள், எல்லைப் பிரச்சினைகள், சர்வதேச பொருளாதார வளர்ச்சி திட்டங்கள் போன்றவை பற்றி விவாதிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி செப்டெம்பர் 3 ஆம் திகதி தனி விமானத்தில் டில்லியில் இருந்து சீனா புறப்படுகிறார். சீனா செல்லும் வழியில் வியட்நாம் நாட்டுக்கு பிரதமர் மோடி செல்கிறார். அந்நாட்டுக்கு இந்தியா சார்பில் இராணுவ உதவி, பொருளாதாரம், முதலீடுகள் உள்ளிட்டவை பற்றி பிரதமர் மோடி பேச்சு நடத்தவுள்ளார்.

ஏற்கனவே கடந்த 2014 ஆம் ஆண்டு மோடி பிரதமராக பதவி ஏற்ற பின்பு ஒக்டோபர் மாதம் வியட்நாம் பிரதமர் இந்தியா வந்தார். அப்போது இந்தியாவிடம் இருந்து பல்வேறு உதவிகள் கோரினார். அதை நிறைவேற்றும் வகையில் பிரதமர் மோடி வியட்நாமுக்கு வழங்கப்படும் உதவிகள் பற்றி அந்நாட்டு பிரதமரை சந்திக்கும் போது அறிவிப்பு வெளியிடவுள்ளார். (இ-7)

## ஆக்கிரமிப்பு காஷ்மீர் அகதிகளுக்கு இரண்டாயிரம் கோடி ரூபா சலுகை

### மத்திய அரசு முடிவு

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருந்து 1947 ஆம் ஆண்டு முதல் அகதிகளாக வெளியேறிய 36ஆயிரத்து 348 குடும்பத்தினர் காஷ்மீர் மாநிலத்தின் ஜம்மு, கதுரா, ரஜோரி ஆகிய மாவட்டங்களில் பரவலாக வசித்து வருகின்றனர்.

எனினும் இவர்கள் காஷ்மீர் மாநில அரசியல் சாசனத்தின்படி அங்கு நிரந்தரமாக குடியேற முடியாது.

இந்த அகதிகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு சலுகை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் பாகிஸ்தான் காஷ்மீரில் இருந்து வெளியேறிய ஒவ்வொரு அகதிகள் குடும்பத்துக்கும் தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை சலுகைகள் கிடைக்கும்.

இதற்கான விரிவான திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சகம் விரைவில் மத்திய அமைச்சரவை யின் ஒப்புதலுக்கு வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் பிரதமர் மோடி, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள கில்கித் - பல்திஸ்தான் பிராந்திய மக்களுக்கு நன்றி தெரிவித்து பேசிய நிலையில் அப்பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறியவர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ பேயை விரட்டியடிப்போம்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்காலத்தில் மகிந்த ராஜபக்ஷ என்ற பேயை குருநாகலில் இருந்து விரட்டியடிப்போம். மீண்டும் அந்தப் பக்கம் அலைந்து திரிய இடமளிக்க மாட்டோம் என்று பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



"ராஜபக்ஷ குடும்பத்தினர் இப்போது. பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குச் செல்கின்றனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கும் சென்று வருகின்றனர். அப்பா வரும் போது. மகன் போகிறார். பேரன் வரும்போது. பாட்டி போகிறார்" என்றும் ஹெட்டிபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அபிவிருத்தக் கூட்டமொன்றின் போது. பொன்சேகா தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர். "கடந்த 2010 ஆம் ஆண்டின் போது. ஐக்கிய தேசியக் கட்சியினர் தான். எனக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். அப்போது எனக்கு. மக்கள் விடுதலை முன்னணி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றின் ஆதரவும் கிடைத்தது" என்றார். "யுத்தத்தின் பின்னர். ஐ.தே.கவானது. ஆதரவற்ற நிலைமைக்கு தள்ளப்பட்டது.

ராஜபக்ஷக்களின் அடாவடி மற்றும் குண்டர் நடவடிக்கைகளுக்குப் பயந்து. அக்கட்சியிலிருந்து முன்வர எவரும் இருக்கவில்லை. அப்போது தான். நான் அக்கட்சியோடு இணைந்து அரசியலுக்குள் பிரவேசித்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# உணவுப் பாதுகாப்பு வாரத்தில் மட்டும் 862 உணவகங்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு மேற்கொள்ளப். பட்ட சுற்றிவளைப்புகளின் போது 862 உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உணவகங்கள், வெதுப்பகங்கள். விடுதிகள் மற்றும் தூர இடங்களுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போது பேருந்து நிறுத்தப்படும் உணவகங்கள் என்பன உள்ளடங்குவதாக சுகாதார பணிப்பாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

862 உணவகங்களும் சுகாதாரமற்ற உணவுகளை தயாரித்தமை. காலாவதியான உணவுகளை விற்பனை செய்தமை போன்ற காரணங்களால் குறித்த வர்த்தக நிலையங்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன். மேலும் பல வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான இந்த உணவு பாதுகாப்பு வாரமானது நாளைய தினம் முடிவடையவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7-10)

# பட்டத்தால் விபத்துக்குள்ளாகும் விமானங்கள்

(கொழும்பு)

விமானங்கள் அதிகமாகப் பறக்கும் பிரதேசங்களில் பட்டங்களால் விமானங்கள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும். இதனால் பயிற்சி விமானங்கள் பாதிப்பை சந்திப்பதாகவும் விமானப் படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விசேடமாக இரத்மலான. நீர்கொழும்பு. பிலியந்தலை. கட்டுநாயக்க ஆகிய பிரதேசங்களிலே இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக விமானப்படை தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

சாதாரண விமானம் ஒன்று மிகவும் குறைவான உயரத்தில் பறக்கும் போது அதன் இறக்கைகள் அல்லது இயந்திரத்தின் முன் பகுதி என்பவற்றில் பட்டத்தின் நூல் சிக்குவதால் விமானம் சேதமடைவதாகவும், இதனால் விமானங்கள் விழுந்து உடைந்த சந்தர்ப்பங்களும் இலங்கையில் அதிகம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் 200 மீற்றர் உயரத்துக்கு மேலாக பட்டம் விடுவது தடை செய்வதற்கான சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கையில் அவ்வாறு எவ்வித சட்டங்களும் இல்லை என்றும் விமானப்படை தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, இலங்கையிலும் பட்டம் விடுவது தொடர்பில் சட்ட திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என விமானப்படை கோரிக்கை விடுத்துள்ளது.

இதனால் விமானங்களுக்கு ஏற்படும் சேதங்களால் மில்லியன் கணக்கான நட்டங்களை தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் விமானப்படை தெரிவித்துள்ளது. (இ-7-10)

# தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய மேன்முறையீட்டு விசாரணைகள் பூர்த்தி

தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய மேன்முறையீட்டு விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாக விசாரணைக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அளவில் மீளாய்வு செய்யப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் பற்றிய விபரங்களை வர்த்தமானியில் அறிவிக்க முடியும் என தெரிவித்தார்.

ஏற்கனவே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட சில தொகுதிகள் தொடர்பிலான மேன்முறையீடுகளை விசாரணை செய்வதற்காக. உள்ளூராட்சி மன்ற மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா அசோக பீரிஸ் தலைமையில் குழுவொன்றை நிறுவியிருந்தார்.

எல்லை நிர்ணயம் தொடர்பில் அரசியல் கட்சிகள், மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் போன்றவற்றினால் செய்யப்பட்ட மேன்முறையீடுகள் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்தக் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

மீள் நிர்ணயம் செய்யப்பட்ட தொகுதிகளின் வரைபடங்களை உருவாக்குதல் மற்றும் எல்லைகளை நிர்ணயித்தல் போன்றவற்றுக்காக அளவையாளர் திணைக்களத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

மீள் நிர்ணயம் குறித்த அறிக்கை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் அகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எதிர்வரும் நாட்களில் ஒப்படைக்கப்படவுள்ளது. (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## தப்பிக்கும் மனப்பான்மை

ஒரு சிறு பூச்சி கூடத் தனக்கு ஆபத்து என்று தெரிந்ததும் தப்பித்து ஓடப் பார்க்கிறது. இது உயிரின் அடிப்படைக் குணம்.

எந்த உயிரினமும் தனக்கு ஆபத்து என்று தெரியும் விடயங்களில் ஒதுங்கியே வாழ்கின்றது. இதில் தவறில்லை.

மனிதனுக்கு இந்தக் குணம் ஒரு படி அதிகமாகவே உண்டு. மனிதன் தன் உயிருக்கு மட்டுமல்ல. உடைமைகளுக்கு ஆபத்து என்றாலும் தப்பிக்கப் பார்க்கிறான். அது மட்டுமா? தனக்கு ஒரு செயலால் கெட்ட பெயர் ஏற்படும் என்றால் அதிலும் தப்பிக்கவே பார்க்கிறான். இதிலும் தவறில்லை.

ஆனால்–

தன் செயல்களின், தன் தவறுகளின் பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டிய கட்டத்தில் தப்பிக்கப் பார்க்கிறானே! அது தான் மகா தவறு.

எதையெடுத்தாலும்–

ஐயோ நானில்லை! இவன் தான் ! என்று பக்கத்துப் பையனைக் கைகாண்பிக்கும் இந்தப் பள்ளிக்கூடத்துப் பழக்கம் அவனை விட்டுச் சாமானியத்தில் போகிறதா என்ன? இல்லை. வாழ்க்கைப் பயணம் முழுக்கக் கூடவே வருகிறது.

தப்பிக்கும் மனப்பான்மை மனிதனைச் சில சந்தர்ப்பங்களில் – ஒரு சில கஷ்ட நஷ்டங்களில் இருந்து காப்பாற்றலாம். ஆனால், நீடித்த காலத்தில் பல சந்தர்ப்பங்கள் என்ன கஷ்ட நஷ்டங்கள் நிகழ இருந்தனவோ, அவற்றை விடப் பன்மடங்காகத் தான் நிகழும். ஆக தப்பிக்கும் குணம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிலைமையை மோசமாக்கி விடுவதைத்தான் நாம் பார்க்கிறோம்.

தப்பிக்கும் மனப்பான்மையே நம்முடைய பலவீனங்களின் கூட்டுக்குணம்.

இருவர் சம்பந்தப்பட்ட ஒரு செயலில் ஒருவர் தப்பிக்கும் போது ஒரு நம்பிக்கைத் துரோகமாகிறது. நடந்ததை மறைத்துப்பொய் சொல்வதாகிறது.

எல்லாவற்றையும்விட நம்முடைய குறைகளை நாம் உணராமல் சாக்குப் போக்குச் சொல்லிக் கவனங்களைத் திசை திருப்புவதாகிறது.

நம் தவறுகளை, குறைகளை நாம் உணர வேண்டும். நம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு செயலிலும் நமக்குப் பொறுப்பு உண்டு. பங்கு உண்டு என்பதை ஏற்க வேண்டும். இந்த உணர்வுகளை நாம் மதிக்காமல் போனால் நமக்கு அவப்பெயர் தான் மிஞ்சும்.

சாதகமான விடயங்களுக்கெல்லாம் நான் தான் பொறுப்பு என்று தலையை நுழைப்பதும் பாதகமான விடயங்களுக்கெல்லாம் நான் காரணமில்லை என்று கையை உதறுவதும் பொறுப்பற்ற செயல்.

நடந்ததை இருப்பதைச் சொல்லிவிட்டால் நம்மைத் தப்பிக்க வைக்க வேண்டும் அல்லது பின்விளைவுகளின் வீரியத்தைக் குறைக்க வேண்டும் என்கிற பொறுப்பு நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு வந்துவிடுகிறது.

இதைவிடச் சாதகமான சூழ்நிலை வேறு என்ன இருக்க முடியும்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை-2016

## பொதுஅறிவு (பயிற்சிக்குரியது)

தொகுப்பு:-T.Thirumurugan (B.A.Dip.In Poli.Ed.Dip.In.HR)

01.இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் புதிய தலைவர் யார்?

02.தரம் 01 மாணவர் அனுமதி வகுப்பு ஒன்றுக்கு மாணவர்கள் எத்தனை?

03.இலங்கையின் மிகப்பெரிய தானிய களஞ்சியம் எங்கு அமைந்துள்ளது? உதவி வழங்கிய நிறுவனம் எது?

04. 9 ஆவது தேசிய சாரணர் ஜம்பொறி எங்கு இடம் பெற்றது?

05. 2016 ஆண்டு எவ்வாறான ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது?

06. இலங்கையின் 29ஆவது புதிய சட்டமா அதிபர் யார்?

07. இலங்கையின் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய மலர் எது?

08. இலங்கையின் 34 ஆவது பொலிஸ்மா அதிபர் யார்?

09. இலங்கையின் 44 ஆவது புதிய பிரதம நீதியரசர் யார்?

10.பொருளாதார சுட்டெண்ணில் தற்போது இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?

11. 2015 ஆம் ஆண்டு 150ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடிய நிறுவனம் எது?

12. 2016 ஜனவரி மாதம் முதல் மைக்ரோன் 20க்கு குறைவான பொலித்தீன் பாவனைக்கு தடைவிதித்த அமைப்பு எது?

13.ஆசிய கனிஸ்ட வலைப்பந்தாட்ட போட்டியில் இலங்கை மலேசியாவை தோற்கடித்து சம்பியன் ஆனது. அவ் அணியின் தலைவி யார்?

14.இலங்கையின் முதலாவது சபாரி விலங்கியல் பூங்கா எங்கு அமைந்துள்ளது?

15. இலங்கையில் நச்சு தன்மையற்ற தேசிய விவசாயத்தை ஊக்கப்படுத்தும் பழக்கிராமம் எங்கு அமைந்துள்ளது?

16.இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோய் பாதிப்பினால் தடைவிதிக்கப்பட்ட கிருமி நாசினி எது?

17.எட்கா வர்த்தக மற்றும் தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகள் எவை?

18. 2016 ஆம் ஆண்டு தரப்படுத்தலில் சிறந்த வங்கி எது?

19.இலங்கையில் கடற்கரையோரங்கள் கொண்ட மாவட்டங்கள் எத்தனை?

20.இல்ங்கையில் அண்மையில் மண்சரிவிற்கு உட்பட்ட மாவட்டங்கள் 05 தருக?

21.இலங்கையின் 130ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடிய திணைக்களம் எது?

22.இலங்கையின் 08ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2015 ஆம் ஆண்டு நடைபெற்றது. பிரதமர் யார்? சபாநாயகர் யார்?

23.உலக சுகாதார நிறுவனத்தின் உச்சி மாநாடு நடைபெற உள்ள இடம் எது?

24.கண்டி. அஸ்கிரிய பௌத்த பீடத்தின் 21 ஆவது மகாநாயக்க தேரர் அண்மையில் காலமானார். அவர் யார்?

25.மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட நாடு எது?

26.உலகில் பலஸ்தீன தேசம் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

27. 2015 ஆம்ஆண்டுதனது விடாஸ்நாணய அலகைவிட்டுயூரோ இணைந்த 18ஆவது நாடு எது?

28.நாஸா நிறுவனமும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையகமும் இணைந்து புவியீர்ப்பு ஆய்வை மேற்கொள்ள அனுப்பிய விண்கலம் எது?

29.கர்ப்பிணி தாய்மார்க்கு 20,000 பெறுமதியான போசாக்கு உணவு வழங்கப்படுகின்றது. இதற்கு உதவும் ஸ்தாபனம் எது?

30.ஆபிரிக்க கண்டத்தில் முதன் முதலில் முஸ்லீம் பெண்கள் பர்தா அணிய தடை விதித்த நாடு எது?

31. 19ஆவது அரசியல் திருத்த அமைப்பு பேரவையின் தலைவர் யார்?

32.மலேசியாவில் இருந்து சிங்கப்பூர் என்ற நாட்டை 1959 ஆம் ஆண்டு உருவாக்கி முதல் பிரதமராகவும் 31 ஆண்டுகள் ஆட்சி செய்து அண்மையில் காலமானவரும் யார்?

33.சிறுவர் விடயம் தொடர்பாக அழைக்கப்படும் தொலைபேசி இலக்கம் யாது?

34.அண்மையில் ஏற்பட்ட பூகம்பத்தினால் எவரெஸ்ட் 2.8cm உயரம் குறைந்து காட்மண்டு 86 cm உயரம் கூடியது. அது எந்த நாட்டில் இடம் பெற்றது?

35.உலகில் மிகப்பெரிய புத்தர் சிலை அமைந்துள்ள இடம் எது?

36.மரண தண்டனை கைதிகளின் உடலுறுப்பைபெற்று வந்த அரசாங்கம் எது?

37. 2015ஆம் ஆண்டு கால நிலை மாநாடு நடைபெற்ற இடம் எது?

38. 2015 பொதுநலவாய மகாநாடு இடம் பெற்ற நாடு எது?

39.பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகிக் கொண்ட நாடு எது?

40.ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்து கொண்ட 28ஆவது உறுப்பு நாடு எது?

41. 12ஆவது தெற்காசிய விளையாட்டு போட்டி எங்கு இடம் பெற்றது?

42. 13ஆவது தெற்காசிய விளையாட்டு போட்டி நடைபெற உள்ள இடம் எது?

43. 6ஆவது T -20 கிரிகெற் போட்டி எங்கு இடம் பெற்றது? வெற்றி பெற்ற அணிகள் எவை?

44. 18 ஆவது ஆசிய விளையாட்டுப்போட்டி 2018 ஆம் ஆண்டு எங்கு நடைபெற உள்ளது?

45.மகளிர் T -20 உலகக்கிண்ணத் தொடரில் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணி எது?

46.மேற்கிந்திய தீவுகளின் எந்த ஒரு மைதானத்துக்கு கிரிக்கெட் வீரரின் பெயர் சூட்டப்பட்டது?

47.T – 20 கிரிக்கெற்போட்டி (2020) எங்கு நடைபெறவுள்ளது?

48.11ஆவது உலகக்கிண்ண கிரிக்கெற்போட்டி எங்கு நடைபெற்றது? வெற்றிபெற்ற அணிஎது?

49.12ஆவது உலகக் கிண்ண கிரிகெட் போட்டி எங்கு நடைபெற உள்ளது?

50. 2016 ஒலிம்பிக் விளையாட்டு விழாவை முன்னிட்டு இலங்கையில் 04 நினைவு முத்திரைகள் வெளியிடப்பட்டன. அவைகள் எவை?

51. 2012.2016.2020 ஆம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டு போட்டி நடைபெற உள்ள நாடு?

## பொதுஅறிவு விடைகள்

01. திலங்க சுமதிபால
02. 2016 - 40    2021 - 35 ஆக அமையும்
03. மொனராகலை - புத்தள பிரதேசம் - உலக வங்கி 260 மில்லியன்
04. யாழ்ப்பாணம்
05. ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு ஊட்டமிகு விதைகள் (பருப்பு விதைகளின் ஆண்டு)
06. ஜயந்த ஜெயசூரிய
07. அல்லி மலர்
08. பூஜித ஜயசுந்த
09. ஸ்ரீபவன்
10. 68ஆவது
11. கொழும்பு மாநகர சபை
12. மத்திய சுற்றாடல் அதிகாரசபை. தண்டம் - 10000/=
13. ஜயனி திஸாநாயக்கா
14. அம்பாந்தோட்டை – ரிதியகம
15. ஊரப் பொல – நம்புட்டான் கிராமம்
16. கிளைபோசைட்
17. இலங்கை - இந்தியா
18. இலங்கை வங்கி
19. 14
20. கண்டி. சப்பிரகமுவ. இரத்தினபுரி. -நுவரெலியா. கேகாலை
21. சட்டமா அதிபர் திணைக்களம்
22. பிரதமர்-ரணில் விக்கிரமசிங்க. சபாநாயக ருஜெயசூரிய
23. கொழும்பு
24. சலகம ஸ்ரீ அத்தஸ்லி தேரர்
25. இலங்கை
26. 1967
27. லிதுவேனியா
28. லீசா(Lisa)
29. உலக வங்கி
30. கொங்கோ
31. சபாநாயகர்.
32. லீ குவான் யூ
33. 1929
34. நேபாளம்
35. குருநாகல் ரம்பொடகல திரிகம மொனராகல
36. சீனா
37. ஜேர்மனி
38. மோல்டோவா
39. காம்பியா
40. குரோசியா
41. இந்தியா – அசாம் மாநிலம் - குஹாத்தி சிலோன்
42. நேபாளம்
43. இந்தியா (இந்தியா.மேற்கிந்திய தீவுகள். இங்கிலாந்து. நியூசிலாந்து) (மேற்கிந்தியா - இங்கிலாந்து) மேற்கிந்தியா–சம்பியன்
44. இந்தோனேசியாவின் - ஜகார்த்தா
45. மேற்கிந்தியத் தீவு–அணி (அவுஸ்ரேலியா)
46. டேரன் சமி
47. அவுஸ்ரேலியா
48. அவுஸ்ரேலியா சம்பியன் 186/3 (05முறை)
    நியூசிலாந்து -183    போட்டி நாயகன் - மிக்கல் ஸ்டாக்
    அதிக ஓட்டம் - 547 – நியூசிலாந்து
49. 2019 இங்கிலாந்து
50. 8.00, 10.00. 35.00. 50.00 தபால் உறை
51. 1.லண்டன்    2.பிரேசில் (றியோடி ஜெனிரோ)
    3.ஜப்பான் - டோக்கியோ

◆◆◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## வணிகக்கல்வியும் கணக்கீடும் பகுதி-I, II விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 4 | 11) | 2 | 21) | 1 | 31) | 2 |
| 2) | 1 | 12) | 2 | 22) | 3 | 32) | 2 |
| 3) | 1 | 13) | 2 | 23) | 2 | 33) | 1 |
| 4) | 2 | 14) | 1 | 24) | 4 | 34) | 3 |
| 5) | 2 | 15) | 2 | 25) | 2 | 35) | 2 |
| 6) | 4 | 16) | 4 | 26) | 4 | 36) | 2 |
| 7) | 1 | 17) | 3 | 27) | 4 | 37) | 4 |
| 8) | 1 | 18) | 2 | 28) | 4 | 38) | 3 |
| 9) | 4 | 19) | 1 | 29) | 2 | 39) | 3 |
| 10) | 4 | 20) | 2 | 30) | 1 | 40) | 1 |

### பகுதி-II

01)
1. தனியாள் உடைமை உரிமையாளரால் மூலதனம் இடப்படும்
2. உரிமையாளரால் இலாபம் அல்லது நட்டத்தை ஏற்றல்
வரையறுக்கப்படாத நட்டப்பொறுப்பு
சட்ட ஆளுமையற்றது
நீண்ட கால இயங்கும் தன்மை
பதிவு செய்தல் கட்டாயமானதல்ல
3. பொருள் உற்பத்தி வணிகம் - தேயிலை உற்பத்தி
சேவை உற்பத்தி - தனியார் பஸ் சேவை
4. புதிய தொழிநுட்ப இயந்திரங்களை பயன்படுத்தல்
◆ தரமான மூலப்பொருட்களை பயன்படுத்தல்
◆ அர்ப்பணிப்பான ஊழியர்
◆ குடும்ப பின்னணி
5. -
6. தொழில் வாய்ப்புகளை வழங்கல்
தரமான பொருட்களை உற்பத்தி செய்து வழங்கல்
7. அப்பிரதேசத்திலுள்ள ஏனைய இரு தொழிற்சாலைகள்
8. ஆம்
உரிமையாளர் பெயர் தவிர்ந்து பொது பெயராக காணப்படுவதால் பதிவு செய்யலாம்
9. 1918 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க வியாபார பெயர்பதிவு சட்டத்தின் கீழ்
10. வியாபார தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தல்

02)
1. அகச்சூழல் — புறச்சூழல்
உரிமையாளர் — நுகர்வோர்
முகாமையாளர் — போட்டியாளர்கள்
தொழிலாளர்கள் — அரசியல் சூழல்
பொருளாதார சூழல்
தொழிநுட்ப சூழல்
2. பலங்கள் - போதியளவு மூலதனம் காணப்படல்
திறன்மிக்க முகாமையாளர்கள்
பயிற்றப்பட்ட மற்றும் அர்ப்பணிப்பான ஊழியர்கள்
சிறந்த உற்பத்தி உபாயங்கள்
வியாபார பெயர்
பலவீனங்கள் - உரிமையாளரின் நிதிப்பலம் குறைவாக இருத்தல்
பயிற்சி பெற்ற ஊழியர் போதாமை
நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தாமை
பணியாளர்களின் எதிர்மறை பாங்கு
3. பொருளாதார சூழல் காரணிகள்:- வட்டிவீதம், பணவீக்கம், வருமான பரம்பல் நிறைதொழில்மட்டம், சர்வதேச தொடர்பு அந்நியசெலாவணி மாற்றுவீதம் சேமிப்புகள்
4. a) தனியார் துறை வணிகம்
பொதுத்துறை வணிகம்
b) 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனி சட்டம்
5. ஜனநாயக நிர்வாகம்
சுயமான திறந்த அங்கத்துவம்
அங்கத்துவருக்கு சமமான உரிமை
பொது தேவைபாடுகளையும் நோக்கங்களையும் கொண்டிருத்தல்

03)
1. a) நடைமுறை கணக்குரிமையாளரினால் குறித்த பணத்தொகையை குறிப்பிட்ட நபருக்கு அல்லது கொண்டு வருபவர்க்கு செலுத்தும்படி வங்கிக்கு அறிவித்தல் விடுவிக்கப்படும் எழுத்து மூலமான கட்டளையே "காசோலை" எனப்படும்.
b) கட்டளையிடுபவர்
கட்டளையை பெறுபவர்
பணம் பெறுபவர்
2. காசோலையின் முன்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரை அதே முறையில் காசோலையின் பின்புறத்தில் அவரது கையெழுத்தினால் எழுதுவது காசோலை புறக்குறிப்பிடலாகும்
- வங்கி கணக்கில் வைப்பில் இடும்போது
- கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்காக ஏனையவருக்கு வழங்கும் போது
3. வழிமார்க்கம் - வீதி.புகையிரதபாதை.நீர்
ஊடகம் - பஸ்.புகையிரதம்.கப்பல்
வலு சக்தி - பெற்றோல்.மின்சாரம்.நீரியல் சக்தி
தரிப்பிடம் - பஸ் தரிப்பிடம். விமான நிலையம். துறைமுகம்
4. தொலைநகல் - இணையபக்கங்கள் ஒளிபரப்பு ஊடகம்
மின்னஞ்சல் -
இணையம் - சமூக வலைத்தளங்கள்
5. ஆயுள் காப்புறுதி
◆ மனிதரது ஆயுள் மீதான காப்புறுதி
◆ இழப்பீட்டு தத்துவம் பிரயோகம்
◆ இழப்பீடு ஏற்படின் மட்டுமே தொகை வழங்கப்படும்
◆ காப்புறுதி தொகைக்கு மேலதிகமாக உபகார பணம் வழங்கப்படும்

ஆதன காப்புறுதி
◆ ஆதனம் மீதான காப்புறுதி
◆ இழப்பீட்டு தத்துவம் பொறுத்தமற்றது
◆ இழப்பு ஏற்பட்டாலும் ஏற்படாவிடினும் இழப்பு வழங்கப்படும்
◆ ஏனைய அனுகூலம் பெற முடியாது

04)
1.

| சேமிப்பு வைப்பு | நிலையான சேமிப்பு கணக்கு |
|---|---|
| • குறைந்த வட்டி வீதம்<br>• வைப்பு புத்தகம் வழங்கப்படும்<br>• எந்நேரத்திலும் வைப்பு செய்யவோ மீள பெறவோ முடியும் | • கூடியளவு வட்டி வீதம்<br>• வைப்பு சான்றிதழ் வழங்கப்படும்<br>• குறிப்பிட்ட தொகையினை குறித்த கால எல்லைக்கு வைப்பு செய்தல் |

2. உற்பத்தி நடவடிக்கைக்கு தேவையான வளங்களை பெற்றுகொடுத்தல்
முடிவுப்பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லல்
பணியாளர்களை கொண்டு வரல்
பொருட்களை நுகர்வோர் இடத்தில் ஒப்படைத்தல்
3. திட்டமிடல். ஒழுங்கமைத்தல். நெறிப்படுத்தல். கட்டுப்படுத்தல்
4. a-ஒழுங்கமைத்தல் b-நெறிப்படுத்தல்
c-கட்டுப்படுத்தல் d-திட்டமிடல் e-ஒழுங்கமைத்தல்

05)
1.

| இல | சொத்துக்கள் = | மூலதனம் + | பொறுப்புகள் |
|---|---|---|---|
| a | 200000 | 200000 | |
| b | 200000 | 200000 | |
| c | 200000 | 200000 | |
| d | 200000 | 200000 | |
| e | 200000 | 200000 | +50000 |
| | 250000 | 200000 | 50000 |

2.

காசேடு

| | | | |
|---|---|---|---|
| மூலதனம் | 200000 | மோ.வாகனம் | 75000 |
| வங்கிகடன் | 50000 | காணி கட்ட | 100000 |
| | | கொள் | 25000 |
| | | மீதி கொ.செ | 50000 |
| | 250000 | | 250000 |

மோட்டார் வாகன கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 75000 | | |

காணி கட்டடம்

| | | | |
|---|---|---|---|
| காசு | 100000 | | |

கொள்வனவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| காசு | 25000 | | |

வங்கிக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| | | காசு | 50000 |

நிசாம நிறுவனத்தின் 31.12.2015 திகதியிலான பரீட்சை மீதி

| பேரேட்டு கணக்கு | வரவு | செலவு |
|---|---|---|
| காசு | 50000 | |
| மூலதன கணக்கு | | 200000 |
| மோட்டார் வாகன கணக்கு | 75000 | |
| காணிகட்டட கணக்கு | 100000 | |
| கொள்வனவு கணக்கு | 25000 | |
| வங்கிகடன் கணக்கு | | 50000 |
| | 250000 | 250000 |

06) a)

சீராக்கப்பட்ட வங்கிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி.கொ.வ | 10500 | வங்கி அற | 500 |
| கடன்.படு | 3500 | நிலையற்ற கட் | 2000 |
| | | மீ.கொ.செ | 11500 |
| | 14000 | | 14000 |

b) வங்கி இணக்க கூற்று

| | |
|---|---|
| சீராக்கப்பட்ட வங்கி கணக்கு மீதி | 11500 |
| கூட்டு சமர்பிக்கப்படாத காசோலை | 8500 |
| | 20000 |
| கழி தீர்வையாகாத காசோலை | (12000) |
| வங்கி கூற்றின் படி மீதி | 8000 |

பொதுநாட்குறிப்பேடு

| | | |
|---|---|---|
| மின்சார கணக்கு வரவு<br>தொங்கற்கணக்கு<br>(பதியப்படாத மின்சார கணக்கு மீதி 16000 சீராக்கப்பட்டது) | 16000 | 16000 |
| தொங்கல் கணக்கு வரவு<br>வட்டி கணக்கு<br>(வட்டி வருமான கணக்கு பரீட்சை மீதியில் தவறவிடப்பட்டது) | 20000 | 20000 |
| வங்கி கடன் கண்க்கு வரவு<br>தொங்கற் கணக்கு<br>(காசேட்டில் மட்டும் பதியப்பட்ட கடன் மீள் கொடுப்பனவு உரிய கணக்கில் பதியப்பட்டது) | 30000 | 30000 |
| தொங்கல் கணக்கு வரவு<br>கொள்வனவு<br>(கொள்வனவு கணக்கு மீதி 20000 தொகையால் சீராக்கப்பட்டது) | 20000 | 20000 |
| பற்று கணக்கு வரவு<br>தொங்கல் கணக்கு<br>(பற்று கணக்கு மீதி ரூபா 34000 ரூபா 43000 என சரியாக பதியப்பட்டது ) | 9000 | 9000 |

தொங்கல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி.கொ.வர | 15000 | மின் | 16000 |
| வட்டி.வரு | 20000 | வங்.கடன் | 30000 |
| கொள்வனவு | 20000 | பற்று | 9000 |
| | 55000 | | 55000 |

◆◆◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவிடம் தலைமைத்துவம் இல்லை இணைந்திருப்பதால் பயனுமில்லை

## போக்குவரத்து அமைச்சர் நிமால் கூறுகிறார்

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் காணப்படும் போது மகிந்தவின் பின்னால் செல்வதில் பயன் இல்லை என்று போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**



கட்சியின் கொள்கைக்கு அமைய மகிந்த கட்சியின் தலைமைத்துவத்தை மைத்திரியிடம் ஒப்படைத்துள்ளார்.

எனவே நாம் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபாலவிற்கு கட்சியின் தலைமைத்துவம் வழங்கப்பட்ட பின்னரும் அவருக்கு எதிராக சூழ்ச்சிகளை செயவது, அவரது கால்களைப் பற்றி இழுப்பது என்பவற்றை செய்யக்கூடாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிலர் இரண்டு மனநிலைகளில் உள்ளனர். அங்கு செல்வதா? இங்கு செல்வதா, என அவ்வாறு முடியாது.

ஏனெனில் நாம் ஒன்றைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் கைச் சின்னத்துடன் யார் இருக்கிறார்களோ அவர்கள் பக்கம் நிற்பதே சிறந்தது என்றும், அதை விடுத்து கட்சியின் தலைவரை விமர்சித்து யாராலும் முன்னோக்கிச் செல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் கட்சிக்காக பாடுபடுகிறோமே தவிர தனிநபர்களுக்காக பாடுபடவில்லை என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா விளக்கமளித்துள்ளார். (இ-7-10)

# 3 ஆயிரத்து 150 கிலோகிராம் எடையுடைய இறால்கள் 2 ஆண்டுகளாக குளிர்சாதனப் பெட்டிகளில் தேக்கம்

(கொழும்பு)

3 ஆயிரத்து 150 கிலோகிராம் எடையுடைய இறால்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபன குளிர்சாதனப் பெட்டிகளில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இறால் வகைகளை புதிய வகை இறால்களுடன் கலந்து சந்தையில் விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டதாக கொழும்பு ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் குளிர்சாதனப் பெட்டிகள் மூடப்பட்டதன் பின்னர் வாடகை அடிப்படையில் இரண்டு கொளகலன் குளிர்சாதனப் பெட்டிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு இந்த இறால் தொகை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்று மீன்பிடிப்பதற்கான இறையாக இறால்களை பயன்படுத்தவெனக் கூறி இந்த இறால் தொகையை இரண்டாண்டுகளுக்கு முன்னதாக குளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தியுள்ளது.

மீன்பிடித் திணைக்கள குளிர்சாதனப் பெட்டிகள் மூடப்பட்ட நிலையில் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கொள்கலன்களில் இந்த இறால்வகை களஞ்சியப்படுத்தப்பட்டது.

எனினும், இந்த இறால் தொகையை குறித்த நிறுவனம் குளிர்சாதன வாடகையைச் செலுத்தி மீளப் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் அவற்றை விற்பனை செய்ய இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கணக்காய்வாளர் திணைக்களத்தின் ஆறு அதிகாரிகள் இது குறித்து மீன்பிடித் திணைக்களத்தில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 821

பஞ்சலிங்கம்




ஜனா




உஷாந்தன் நெய்மார்




யதுசாயினி




ஜசி




லோஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பான் கீ மூனின் விஜயம் மூலம் ஜெனிவா நெருக்கடியிலிருந்து பூரணமாக விடுபட முடியும்

## அமைச்சர் ராஜித நம்பிக்கை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் இலங்கை விஜயம் அரசாங்கத்திற்கு சாதகமானது. ஜெனிவா நெருக்கடிகளில் இருந்து நாம் பூரணமாக விடுபட அவரது விஜயம் சாதகமாக அமையும் என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சிவில் அமைப்புகளுடனான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சந்திப்பு அவசியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

நாளை 31ஆம் திகதி ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு வரவுள்ள நிலையில் 'அவரது விஜயம் நாட்டின் மீதான சர்வதேச அழுத்தங்களுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளன என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களை முழுமையாக குறைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. எனினும் சர்வதேச அழுத்தங்களை பலப்படுத்தி நாட்டில் தொடர்ந்தும் குழப்பகர சூழல் ஒன்றை ஏற்படுத்தவும் ஒருசாரார் முயற்சித்து வருகின்றனர். தற்போது ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் இலங்கைக்கான வருகையும் கூட தமது பக்கம் சார்பாக்கிக்கொள்ள முயற்சித்து வருகின்றனர். எவ்வாறு இருப்பினும் இவர்களது முயற்சிகள் அரசாங்கத்தை அழுத்தத்திற்கு உள்ளாக்காது. அதேபோல் தற்



போது அவர் மீண்டும் இலங்கைக்கு வருகின்றமை இலங்கைக்கு சாதகமாக அமையும்.

கடந்த காலங்களில் இருந்த நிலைமைகளை விடவும் இப்போது நாட்டில் ஜனநாயகம் பலமாக அமைந்துள்ளது. வடக்கு மக்களின் நிலைமைகள் பாரிய அளவில் மாற்றம் கண்டுள்ளன. அண்மையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டு தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார். அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியபோதிலும் வடக்கில் மக்களுக்கான ஜனநாயக நகர்வுகளை கையாள்வது தொடர்பில் அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளது. அவ்வாறான நிலையில் தற்போது அவரது விஜயம் சர்வதேச அழுத்தங்களில் இருந்து பூரணமாக நாம் விடுபட வாய்ப்பாக அமையும்.

மேலும் அவரது விஜயத்தின் போது அவர் வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஆனால் இந்த நகர்வுகள் வரவேற்கத்தக்கதாகும். அன்று இருந்ததை விடவும் தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் இன்று இருக்கும் நிலைப்பாடு மாறுபட்ட ஒன்றாகும். ஆகவே அவற்றை தெளிவாக விளங்கிக்கொள்ள சர்வதேச தரப்பினருக்கு நல்லதொரு வாய்ப்பினை நாம் அமைத்துக்கொடுக்க வேண்டும்.

ஆகவே அவரது விஜயத்தை நாம் வரவேற்கின்றோம். அத்துடன் கடந்த ஜெனிவாத் தொடரின் போது இலங்கை அரசாங்கம் செய்யவேண்டிய சில நகர்வுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. குறிப்பாக காணாமற்போனோர் தொடர்பில் ஆராயவும் நிரந்தர நல்லிணக்கம் ஒன்றினை உருவாக்கவும் பலமாக வலியுறுத்தப்பட்டது. அவ்வாறு இருக்கையில் அதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. புதிய அரசியல் அமைப்பு மூலமாக நாம் மேற்கொண்டு வரும் நல்லிணக்க நகர்வுகள் மற்றும் சர்வதேச நாடுகளுடன் நாம் முன்னெடுத்து வரும் நகர்வுகள் என்பன எமக்கு சாதகமாக வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

அதேபோல் இவரது வருகை நாட்டின் இறைமையை பாதிக்கும் வகையில் அமையும் எனவும் அவர் சர்வதேச விசாரணைகள் மற்றும் இராணுவ நீதிமன்றம் போன்றவற்றை அமைக்க வலியுறுத்த வருவதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் அவ்வாறான எந்தவொரு நகர்வுகளும் நடைபெறப்போவதில்லை. இலங்கையின் இறைமை பாதிக்கப்படப் போவதுமில்லை. எவ்வாறு இருப்பினும் அடுத்த ஆண்டு ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்க முன்னர் இலங்கை தொடர்பில் மாறுபட்ட கருத்துகளை பலப்படுத்த கடந்த கால அழுத்தங்களில் இருந்து விடுபட இந்த விஜயம் சாதகமாக அமையும் என அவர் மேலும்தெரிவித்தார். (இ-7-10)

# தமிழ் சினிமா வரலாறு

241

## சாவித்திரியுடன் ஜோடியாக நடித்த 'மனம் போல மாங்கல்யம்'

நாடக டைரக்டராக சீதாராமன் நடித்தார். இவர் பிற்காலத்தில் ஜாவா சீதாராமனாக புகழ் பெற்றார்.

இந்தப் படத்தில் காதல் புரியும் கதாநாயகன் கிடையாது பிரதான வேடத்தில் (மோசடி பேர் வழியாக) நடித்தவர் கொத்தமங்கலம் சுப்பு. படத்தை டைரக்டட் செய்தவரும் அவரே.

இதில் ஜாவர் சீதாராமனின் உதவியாளராக (உதவி டைரக்டர் வேடத்தில்) ஜெமினி குணேசன் நடித்தார்.

26-09-1947இல் வெளியான மிஸ் மாலினி மேல் நாட்டுப் படங்கனுக்கு இணையான தரமான படம் என்று ரசிகர்களாலும் பத்திரிகைகளாலும் பாராட்டப்பட்டது.

தொடர்ந்து ஜெமினி ஸ்டுடியோவின் படங்களில் சிறு சிறு வேடங்களில் ஜெமினிகணேசன் நடிக்கலானார். வி.நாகையாவும் புஷ்பவல்லியும் பிரதான வேடத்தில் நடித்த சக்ரதாரி யில் கிருஷ்ணன் வேடம் மூன்று பிள்ளைகள் படத்தில் மூன்று ஹஜரோக்களில் ஒருவர். (எம்.கே.ராதா, ஸ்ரீராம் ஆகியோர் மற்ற இரு ஹீரோக்கள்)

'ஜெமினியின் பிரமாண்டமான படமான அவ்வையாரில் பாரிமளிரை மணக்கும் இளவரசன் வேடம்.

கண்ணாம்பா தயாரித்த நவஜீவனம் படத்தில் சிறு வேடத்தில் நடித்தார்.

### தாய் உள்ளம்

வழக்கமாக பட்சிராஜா ஸ்டுடியோவின் படங்களை வாங்கி விநியோகித்து வந்த நாராயணன் கம்பெனி சொந்த பேனரில் படங்களைத் தயாரிக்கத் தொடங்கியது. அவர்களின் முதல் படம் தாய் உள்ளம்.

ஜெமினி ஸ்டுணீடியோ வில்னிப்பதிவாளராக ணியாற்றி வந்த கேமரா மேதை கே.ராம்நாத் இந்தப்படத்தை டைரக்ட் செய்தபார்.

படத்தின் கதாநாயகி எம்.வி. ராஜம்மா. ஏஏற்கனவே ராஜாம்பாள் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகியிநுந்த ஆர்.எஜ்.மனோகர் இந்தப் படத்தில் கதாநாயகனான நடித்தார்.

(பிற்காலவத்தில் ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடிக்க மனோகர் வில்லன் வேடத்துக்கு மாறினார்.)

இந்தப் படத்தில் வி.நாகையா, ஜாவர் சீதாராமன், சந்திரபாபு, மாதுரிதேவி, ஜி.சகு;தலா ஆகியோரும் நடித்தனர்.

வி.நாகையாவும் ஏஇராமராவும் இசை அமைத்தனர்.



ராஜராம்மாவுக்காக எம்.எல். வசந்தகுமாரி பாடிய் கொஞ்சும் புறாவே என்ற பாடல் மிகப்பிரபலம்.

09-02-1952இல் வெளி வந்த தாய் உள்ளம்பெரிய வெற்றிப்படம் அல்ல. விருது பெறத்தக்க உயர்ந்த ரக்ப்படம் என்று பெயர் பெற்றது.

தாய் உள்ளத்தை அடுத்து மனம் போல் மாங்கல்யம் படத்தைத் தயாரிக்க நாராயணன் கம்பெனி முடிவு செய்தது.

இதில் கதாநாயகனுக்கு இரட்டை வேடம். ஒருவன் படித்தவன். அடத்தவன் வெகுளி. செமி லூஸ் என்பார்களே அந்த மாதிரி கேரட்டர்.

இந்த இரட்டை வேட நடிப்புக்கு ஜெமினிகணேசன் ஒப்பந்தம் ஆனார்..

(அதுவரை எம்.ஜி.ஆரோ சிவாஜியோ இரட்டை வேடத்தில் நடிக்கவில்லை.)

கதாநாயகி நடிக்க சாவித்திரி ஒப்பந்தமானார்.

இந்த சமயத்தில் சாவித்திரியைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஆந்திராவைச் சேர்ந்த சாவித்திரி 15 வயதிலேயே சினிமாவில் நடிக்க வந்தார். தெலுங்குப் படங்களில் சிறு வேடங்களில் நடித்தார். என்.டி.ராமராவ்-கே.மாலதி நடித்த பாதாள பைரவி தமிழில் டப் செய்யப்பட்டது. அதில் நடன மங்கையாகத் தோன்றினார் சாவித்திரி.

பின்னர் வெளிவந்த விஜயா-வாகினியின் கல்யாணம் பண்ணிப்பார் படத்தில் என்.டி.ராமராவ்-ஜி.வரலட்சுமி ஜோடியாக நடிக்க இரண்டாவது கதா நாயகியாக சாவித்திரி நடித்தார்.

அழகான முகத்தை கொண்ட இந்த இளம் நடிகை யார்? என்று சினிமா ரசிகர்கள் பேசுகிற அளவுக்கு கவனத்தைக் கவர்ந்தார்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர் கொலை; மாவனெல்ல வரையான சீ.சீ.ரி.வி. காட்சிகளைச் சோதிக்க தீர்மானம்

(கொழும்பு)

**இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட, பம்பலப்பிட்டியைச் சேர்ந்த கோடீஸ்வர இளம் வர்த்தகர் முஹம்மட் சகீப் சுலைமானைக் கொன்றவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, கொழும்பிலிருந்து மாவனெல்ல பிரதேசம் வரையுள்ள சீ.சீ.ரி.வி கமராக்களை சோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**



அதற்கு முன்னதாக கொழும்பு, பம்பலப்பிட்டிய சனநெரிசல் மிக்க இடங்களிலுள்ள சீ.சீ.ரி.வி கமெராக்களில் பதிவான காட்சிகளைச் சோதனை செய்திருந்தனர்.

வியாபாரியின் தந்தையிடம் கப்பம் கோரி, கேகாலையிலிருந்து கிடைத்த தொலைபேசி அழைப்பினை மேற்கொண்ட நபரைத் துல்லியமாக அடையாளம் காணுவதற்கான நடவடிக்கையில், பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் 8 நபர்களிடம் விசாரணை செய்த பொலிஸாருக்கு, அதில் ஒருவர் மீது சந்தேகம் வலுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

குறித்த வர்த்தகர், கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 11.30 மணியளவில், பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு முன்னால் வைத்து, இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டே படுகொலை செய்யப்பட்டார்.

அவரது சடலம், கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட மாவனெல்ல - ஹெம்மாத்தகம பிரதேசத்திலிருந்து, கடந்த புதன்கிழமை இரவு மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வர்த்தகர் சுலைமானின் மரணம் தொடர்பில், பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் வர்த்தகர்கள் ஐவர், இந்நாட்டை விட்டு வெளியேற முடியாத வகையில், கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸினால், தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர் காணாமற்போனமை தொடர்பில் இதுவரையில், 30 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ-7-10)

# அடிக்கல் நாட்ட சென்ற அமைச்சருக்கு பாரிய எதிர்ப்பை வெளியிட்ட பிக்குகள்

வத்தளையில் தமிழ் பாடசாலை ஒன்றிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு வருகைதந்த அமைச்சருக்கு பிக்குகள் சிலர் பாரிய எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வத்தளை பிரதேசத்தில் வாழும் மக்களின் நீண்டநாள் கனவு குறித்த பகுதியில் தமிழ் பாடசாலை ஒன்று வேண்டும் என்பதாகும்.

நீண்ட நாள் இழுபறியின் பின்னர் நல்லாட்சி மூலம் வத்தளைப் பிரதேசத்தில் தமிழ்ப் பாடசாலை ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அமைச்சர் ஜோன் அமரதுங்கவினால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் வருகை தந்த அமைச்சருக்கு பிக்குகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் பாடசாலையை அமைக்க வேண்டாம் எனக் கூறி இவர்கள் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர்.

எனினும் குறித்த இடத்தின் ஒரு பகுதியிலேயே பாடசாலை அமைக்கப்படவுள்ளதாகவும், எவ்வித எதிர்ப்புகள் வந்தாலும் பாடசாலை அமைப்பதில் பின்னிற்கப் போவதில்லை எனவும் அமைச்சர் பிக்குகள் உள்ளிட்டவர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலைக்கான அடிக்கல்லை நாட்டிவிட்டு அமைச்சர் வெளியேறும் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை மறித்து அமைச்சரை செல்ல விடாது தடுத்ததாகவும் ஆனால் அமைச்சர் மாற்று வீதியின் ஊடாக புறப்பட்டு சென்ற போது அமைச்சருக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூக்குரலிட்டதுடன், அமைச்சரின் பதாகைகளை தீயிட்டு எரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழர்கள் அதிகமாக செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றாக இந்த பகுதி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோப் குழுவிற்கு தனியாக மத்திய வங்கியின் ஆளுநர்

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கடன்முறிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள மத்திய வங்கியின் ஆளுநரை தனியாக கோப் குழுவிற்கு அழைக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த வாரத்தில் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி கோப் குழுவிற்கு அழைக்கப்படவுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

கோப் குழு கடந்த வாரம் பாராளுமன்றில் ஒன்று கூடிய சந்தர்ப்பத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், மத்திய வங்கி ஆளுநர் கோப் குழுவிற்கு தனியாக அழைக்கப்படும் சந்தர்ப்பம் இதுவே முதற்தடவை என்றும் கோப் குழு குறிப்பிட்டுள்ளது.

குறித்த கடன் முறிப் பத்திரங்கள் தொடர்பான விசாரணைக்கு இதற்கு முதல் மத்திய வங்கியின் ஆளுநர் கோப் குழுவிற்கு அழைக்கப்பட்ட போது மத்திய வங்கியின் பிரதிப்பணிப்பாளர்கள் மூவர் உள்ளிட்ட 26 அதிகாரிகள் சமூகமளித்ததாகவும் கோப்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளைமத்திய வங்கியின் கடன்முறிப் பத்திரங்கள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைய இன்னும் சில வாரங்கள் செல்லும் எனவும் கோப் குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# அரசாங்க சொத்துக்களை விற்பனை செய்யாது அவற்றை மேம்படுத்துவதற்கு புதிய கொள்கை

அரச சொத்துக்களை விற்பனை செய்யாது அவற்றை மேம்படுத்துவதற்கு புதிய கொள்கைகள் வகுக்கப்பட உள்ளன.

அரச சொத்துக்களை தனியாருக்கு விற்பனை செய்யாது அவற்றைக் கொண்டு மக்களுக்கு சிறந்த சேவையாற்றக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி, தனியார்துறையின் முதலீடு, தொழில்நுட்பம், முயற்சியாண்மை, செயற்றிறன் போன்றவற்றை பெற்றுக்கொண்டு அரச சொத்துக்களை காத்திரமான முறையில் மாற்றியமைக்க முடியும் என தெரிவித்துள்ளது.

அரச சொத்துக்களை முழு அளவில் தனியாருக்கு விற்பனை செய்யாது, அவற்றை மீளக் கட்டியெழுப்பும் கொள்கைத் திட்டமொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

புதிய நகர அபிவிருத்தி, அதிவேக நெடுஞ்சாலைகள், சக்தி வள பிறப்பாக்கம், உட்கட்டுமானம் மற்றும் நாட்டின் பொதுத் பொருளாதாரம் போன்றவற்றின் அபிவிருத்திக்கு அரசாங்கத்தின் நிதியை பெற்றுக்கொள்ள காத்திருக்காது தனியார் முதலீடுகளின் ஊடாகவும் இவற்றை மேற்கொள்ளக்கூடிய வகையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சில திட்டங்களில் செயற்படுத்தல் மற்றும் பராமரிக்கும் பொறுப்புக்கள் தனியாரிடம் வழங்கப்பட உள்ளது.

சில திட்டங்களில் வடிவமைத்தல் மற்றும் கட்டுமான பொறுப்புக்கள் மட்டும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7-10)

# பதவி மாற்றங்கள்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராக இருந்த சி.தில்லைநடராஜா பதவி விலகியதைத் தொடர்ந்து, மாமன்றத்தின் பொருளாளராக பல ஆண்டுகள் பதவி வகித்த வே.கந்தசாமி மாமன்றத்தின் பொதுச் செயலாளராக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாமன்ற முகாமைப் பேரவையினால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

வே. கந்தசாமியின் பதவி மாற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, மாமன்ற விடுதிக் குழுத் தலைவியாக செயற்படும் திருமதி. அ.கயிலாசபிள்ளை, பொருளாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் என அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அறிவித்துள்ளார். (இ)

# அந்தனியின் நிதி மோசடியில் நாமல் எம்.பிக்குத் தொடர்பு

துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான நிதியை உரிய நடைமுறையின்றி பெற்று 2010 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு நீர் நிரப்பும் நிகழ்வு மற்றும் திறப்பு விழாவுக்கு செலவிட்ட சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் தொடர்பிருப்பதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நிகழ்ச்சிக்காக 13 கோடியே 80 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், எழுத்து மூலமான சாட்சியம் ஒன்றை சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளார்.

கிரியேட்டிவ் ஹெலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெக்சன் அந்தனி, துறைமுக அதிகார சபையின் முன்னாள் தலைவர் பிரியாத் பந்து விக்ரமவுக்கு அனுப்பிய கடிதத்தையே அரச சட்டத்தரணி ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ, ஜெக்சன் அந்தனியின் எண்ணக்கருவை ஏற்றுக் கொண்டு அதற்கு நன்றி தெரிவித்ததாக அந்தக் கடிதத்தில் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பணத்தை செலுத்துமாறு ஜெக்சன் அந்தனி, பிரியாத் பந்து விக்ரமவிடம் அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

துறைமுக அதிகார சபை, ஜெக்சன் அந்தனிக்கு இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரம் ரூபா பணத்தை செலுத்தியுள்ளதாக பொலிஸ் பரிசோதகர் அனுருத்தவின் மேற்பார்வையில் பொலிஸ் உத்தியோகத்தர் பிரியந்த மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (இ-7-10)

# வயோதிபரை மோதிவிட்டு இருவர் தப்பியோட்டம்

வீதியால் சென்ற வயோதிபரை மோதிவிட்டு, வைத்தியசாலையில் அனுமதிப்பதாக பாசாங்கு செய்துவிட்டு, இருவர் ஓடித்தப்பியுள்ளதாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வல்லை பாலத்திற்கும் ஆவரங்காலிற்கும் இடைப்பட்ட அச்சுவேலிச் சந்தியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆவரங்கால் பக்கமாக துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த வயோதிபரை மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. இதில் வயோதிபர் காயமடைந்தார். இதன் போது வயோதிபரை வைத்தியசாலையில் அனுமதியுங்கள் நாங்களும் உங்கள் பின்பு வருகிறோம் எனக் கூறி விட்டு விபத்தை ஏற்படுத்தியோர் மோட்டார் சைக்கிளுடன் தப்பிழடியுள்ளனர். (இ-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தில் நடமாடும் இலவச மருத்துவ முகாம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிலையத்தின் தலைவர் ஆ.ஞானேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இம்மருத்துவ முகாமில் வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் அ.செந்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் பொது மருத்துவம் மற்றும் கண்பரிசோதனைகள் என்பன இடம்பெற்றது.இதில் 70 பேருக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டுள்ளன.



வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு ஆதிமூல அன்னதான மடத்தினை சூழவுள்ள பகுதிகளை கற்கோவளத்தில் உள்ள 551 படைப்பிரிவினரும் அப்பகுதி மக்களுமாக சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிமை இந்த சிரமதானப்பணி இடம்பெற்றது. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## ஜனாதிபதியின் ஆலோசனையால் வெளிநாட்டவர்களுக்குத் தடை

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய வெளிநாட்டவர்கள் நாட்டில் மாணிக்கக்கல் அகழ்வதற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையின் தலைவர் அசங்க வெலகெதர தெரிவித்தார்.

சில வெளிநாட்டு நிறுவனங்கள் தற்போது சட்டத்திற்கு புறம்பான வகையில் தங்களின் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவ்வாறான நிறுவணங்கள் தொடர்பில் கண்டறிவதற்கான சுற்றிவளைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையின் தலைவர் அசங்க வெலகெதர தெரிவித்துள்ளார். (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 | 70 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 75 | 120 | 100 | 120 | 80 |
| தக்காளி | 60 | 50 | 40 | 60 | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 50 | 80 | 100 | 90 | 60 | 80 |
| கோவா | 120 | 80 | 80 | 100 | 100 | 120 | 100 |
| கரட் | 120 | 80 | 80 | 120 | 120 | 140 | 100 |
| பூசணி | 30 | 20 | 20 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 40 | 20 | 20 | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 100 | 60 | 80 | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 90 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 70 | 120 | 80 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 | 50 | 60 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | — | 120 | — | 140 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 70 | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 120 | 100 | 80 | 120 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 20 | 40 | 60 | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 100 | 60 | 90 | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 60 | 100 | 80 | 80 | 40 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 160 | 150 | 200 | 150 |
| கத்தரிப்பிஞ்சு | 60 | 20 | 30 | 50 | 50 | 50 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 20 | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 280 | 250 | 200 | 240 | 200 | 250 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30-50 | 15-35 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 140 | 120 | — | 120 | 60 | 200 | 100 |
| முள்ளங்கி | 50 | 20 | 20 | 50 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 10 | 20 | 20 | [illegible] |
| ஈரப்பலா | 50 | 20 | 40 | 50 | 40 | 80 | [illegible] |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைக்கு எதிராக தமிழக சட்டசபையில் ஜெயலலிதா தீர்மானம்

263



பொதுவாக்கெடுப்பு

ஈழத்தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு தனிஈழம் குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒரு மனதாக நிறைவேற்றித்தர வேண்டும்.

சட்டசபையில் தீர்மானம்

என்னைப் பொறுத்தவரையில் இந்த அரசை பொறுத்தவரையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப் போரை ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்திருக்கிறோம். இந்திய அரசு தமிழர்களை அழிக்க ஆயுதங்களை அளித்ததிலிருந்து பயிற்சிகளை அளித்ததிலிருந்துஅதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்திருக்கிறோம்.

நான் 3ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் போர்க்குற்றங்களை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும் முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி சிங்களவர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில் அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்த அரசின் மீது பொருளாதார தடையை விதிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தமிழ் நாடு சட்டமன்ற பேரவையில் அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தேன்.

ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்[illegible]த் தட்ட 3 ஆண்டுகள் ஆகக் கூடிய நிலையிலும் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பொதுநலவாய மாநாடு

இது மட்டுமல்லாமல் இராணுவ வீரர்களுக்கு தமிழ் நாட்டில் பயிற்சி அளிப்பதைத் தடுத்து நிறுத்தினேன். இந்தியாவில் எங்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடாது என்று பிரதமரை வலியுறுத்தினேன். இலங்கையைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று உத்தர விட்டேன்.

இலங்கை பங்கேற்கும் ஆசிய தடகளப்போட்டிகளை தமிழ கத்தில் நடத்த அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து அந்தப் போட்டியை நடத்து வதையே தமிழகம் கைவிட்டு விட்டது. மேலும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

ஐ.நா.தீர்மானத்தில் திருத்தங்கள்

சென்ற ஆண்டு அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தினேன். அமெரிக்கா கொண்டு வந்த ஓரளவு வலுவான தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்து அந்த தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய காங்கிரஸ் அரசு வாக்களித்தது.

இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழு முன்பு தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வந்த போது அதற்கு வலுவூட்டும் விதமாக இந்தியா என்னென்ன திருத்தங்களை அளிக்க வேண்டும் என்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தேன்.

மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை

இந்த திருத்தங்களை எல்லாம் கடந்த 19ஆம் திகதி இறுதி வரைவு தீர்மானம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்து மனித உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் நாடாக இந்திய நாடு விளங்க வழிவகை செய்ய வேண்டும் என்று நான் பிரதமருக்கு கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டேன்.

இது மட்டுல்லாமல் இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசியபோது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்குழு கூட்டத்தில் அரசுக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இந்த ஆண்டு கொண்டு வருவது ஒருபுறம் இருந்தாலும் தமிழர்கள் நலன் கருதி தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டேன்.

ஆனால் இதையெல்லாம் மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை.

மாணவர்கள் போராட்டம்

இந்தச் சூழ்நிலையில் இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற, ஈவு இரக்கமற்ற, மனித நேயமற்ற செயல்களை, போர்க்குற்றங்களை, இனப் படுகொலையை கண்டித்து கல்லூரி மாணவ, மாணவியர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இனவெறி

தங்களுடைய சொந்த நாட்டிலேயே தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வரும் அவல நிலைமை நீடிக்கிறது. இது மட்டுமல்லாமல் தமிழர்கள் வசித்த பகுதிகளில் சிங்களவர்களை அரசு குடியமர்த்தி வருகிறது. தமிழர் வழிபாட்டுத்தலங்கள் அகற்றப்படுகின்றன.

மொத்தத்தில் இனவெறி தாண்டவமாடிக் கொண்டு இருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக்கேட்க வேண்டிய மத்திய அரசு தமிழர்களின் உணர்வுகளுக்கு தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு சற்றும் மதிப்பளிக்காமல் பாராமுகமாக இருந்து வருவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

மேற்கண்டவாறு முதலமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

நிறைவேறியது

அவர் பேசி முடித்ததும் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேறியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்த வும் தெரியவேண்டும். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கின் முதலமைச்சரை பான் கீ மூன் சந்திக்க வேண்டும்

இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ள ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு வரும் ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனிடமிருந்து தமிழ் மக்கள் பெரிதாக எதனையும் எதிர்பார்க்கவில்லை.

ஏனெனில் தமிழ் மக்களைக் காப்பாற்ற நினைத்திருந்தால் ஐ.நா பொதுச் செயலாளர் என்ற அடிப்படையில் பான் கீ மூன் 2009 ஆம் ஆண்டில் அதனைச் செய்திருக்க வேண்டும்.

எனினும் அதனை அவர் செய்யவில்லை. வன்னி யுத்தத்தின் போது ஐ.நா தொண்டு அமைப்புகள் உடனடியாக வன்னி பெருநிலப்பரப்பை விட்டு வெளியேறவேண்டும் என மகிந்த ராஜபக்ஷ அரசு அறிவித்தவுடன் எந்தக் கேள்வியுமின்றி ஐ.நா தொண்டு அமைப்புகள் வன்னி பெருநிலப்பரப்பை விட்டு வெளியேறின.

எங்களைக் கைவிட்டு வெளியேறாதீர்கள் என அப்பாவித் தமிழ் மக்கள் வீதியில் கிடந்து தடுத்தனர். இருந்தும் இலங்கை அரசு உத்தரவிட்டால் நாங்கள் வெளியேற வேண்டும் என்பது போல அந்த அமைப்புகள் வன்னிப் பெருநிலப்பரப்பை விட்டு வெளியேற,

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அழுத அப்பாவித் தமிழ் மக்கள் இன அழிப்பின் பேரால் சங்காரம் செய்யப்பட்டனர்.

இந்த அநியாயம் நடந்தபோது ஐ.நா செயலாளர் நாயகம் மௌனமாக இருந்தார். ஆகையால் தான் யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற ஐ.நாவின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடமிருந்து தமிழ் மக்கள் தங்களுக்கு ஏதேனும் நீதி கிடைக்குமென எதிர்பார்க்கவில்லை.

இருந்தும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு தான் செய்தது மகா துரோகத்தனம் என பான் கீ மூன் காலங்கடந்து உணர்ந்திருந்தால், அவர் தமிழ் மக்கள் விடயத்தில் இலங்கை அரசுக்கு உறைக்கக் கூடிய வகையில் ஏதேனும் கூறிவிட்டுச் செல்லலாம்.

மாறாக பான் கீ மூனின் இலங்கை விஜயமும் யாழ்ப்பாண வருகையும் மீண்டும் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைப்பதாக அமைத்து விடுமோ என்ற பயம் தமிழ் மக்களிடம் இருக்கவே செய்கிறது. இந்தப்பயம் தொடர்பில் நியாயபூர்வமான ஆதாரங்கள் இருக்கவே செய்கின்றன.

அதாவது இலங்கைக்கும் அதன்வழி யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரும் ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதாகவும் கூட்டமைப்புடன் சேர்ந்து வடக்கின் முதலமைச்சரை சந்திக்கவுள்ளதாகவும் அவரின் நிகழ்ச்சி நிரல் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும் பான் கீ மூனின் சந்திப்பு நடைபெறுமாக இருந்தால், அது அரசுக்குச் சாதகமாகவும் தமிழ் மக்களுக்குப் பாதகமாகவுமே அமையும் என்பதே உண்மை.

இவ்வாறு கூட்டமைப்புடன் மட்டும் சந்திப்பை மேற்கொள்ளும் வகையில் பான் கீ மூன் யாழ்ப்பாணத்துக்கு வருவராயின் அவரின் வருகை தமிழ் மக்களுக்கு பெரும் பாதகத்தையே தரும்.

எனவே, தமிழ் மக்கள் மீது ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு அக்கறை இருக்குமாயின் அவரின் யாழ்ப்பாண விஜயத்தின்போது வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை தனித்துச் சந்தித்து தமிழ் மக்களின் அவலங்களை – தற்போது இலங்கை அரசு எவ்வாறு நடந்த கொள்கிறது என்பவற்றை அறிந்து கொள்ளவேண்டும்.

இதனுடன் காணாமல்போனவர்களின் உறவுகள், சொந்த இடத்துக்கு செல்ல முடியாமல் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்போர், தமிழ் அரசியல் கைதிகளின் சொந்தங்கள் உள்ளிட்டவர்களையும் அவர் கட்டாயம் சந்திக்க வேண்டும்.

இந்தச் சந்திப்புக்கள் நடந்தால் மட்டுமே பான் கீ மூனின் யாழ்ப்பாண விஜயம் அர்த்தமுடையதாக அமையும்.

## டி.பி.விஜயதுங்கவின் மகள் அரசியலில் ஈடுபட ஆர்வம்!

(கொழும்பு)

உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டால், தீவிர அரசியலில் ஈடுபட தாம் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி டி.பி விஜயதுங்கவின் மகள் தெரிவித்துள்ளார்.

கண்டி பிலிமதலாவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின்போது அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

தாம் அரசியலுக்கான தகுதியை கொண்டிருக்காது விட்டாலும் மக்கள் பணிகள் தொடர்பில் போதுமான தகுதியை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொய் கூறுவதற்கும், மக்களை ஏமாற்றுவதற்கும், சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதற்கும், மக்களின் வாக்குகளை பெற அதிக பணம் செலவழிப்பதற்கும் தாம் பழக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இவரது தந்தையான டி.பி.விஜேதுங்க பிரேமதாச ஆட்சிக்காலத்தில் பிரதமராகவும், பிரேமதாசவின் மரணத்தையடுத்து, ஜனாதிபதியாகவும்பதவியில்இருந்தவர்என் பது குறிப்பிடத்தக்கது.(செ-11)

## நல்லூர்க்கந்தனுக்கு



### உய்ய வழி காட்டுவாய்

தெய்வமே யானெனதே னுஞ்செருக் கால்மனது
தீயவழி செல்லு தையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
திருவருட் பார்வை சாத்தி
உய்யவழி காட்டுவாய்உன்னையல் லாதுணை
யுலகத்தில் எவருமுண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும்வடி வேலனே
மயிலேறு தம்பிரானே

சிவத்திரு யோகர்சுவாமிகள்

## புத்தர் சிலை கட்டுமானத்தை நிறுத்துங்கள்

# வடக்கின் பிரேரணையை ஜனாதிபதிக்கு அவைத்தலைவர் அனுப்பி வைத்தார்

(யாழ்ப்பாணம்)

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு வரும் புத்தர் சிலை கட்டுமானப் பணிகளை உடன் நிறுத்துமாறு கோரியும், புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றுமாறு கோரியும் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1957ஆம் ஆண்டு இரணைமடு குளத்தினை தீர்த்தத் தலமாக கொண்டு யோகர சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட இரணைமடு கனகாம்பிகைக்குள அம்மன் ஆலயத்திற்கு 13.5 ஏக்கர் காணி இருந்தது. இதில் தற்போது ஒன்பது ஏக்கர் காணி மாத்திரமே ஆலய நிர்வாகத்தின் கீழ்காணப்படுகிறது.

மிகுதி 4.5 ஏக்கர் காணியும் இராணுவத்தின் பிடியில் இருக்கிறது. எனவே குறித்த காணியை மீண்டும் ஆலயத்திற்கு பெற்றுத்தருமாறு ஆலய நிர்வாகம் 2009ற்கு பின்னர் அதிகாரிகள், அரசியல்வாதிகள், இராணுவத்தினர் என பலரிடமும் பல தடவைகள் கோரியும் இது வரைக்கும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

இந்து கலாசார மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனின் கவனத்திற்கும் இவ்விடயம்கொண்டு செல்லப்பட்டும் நடவடிக்கைகள் எதுவும் ஆரோக்கியமானதாக அமையவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன நிலைமைகளை நேரில பார்த்தமைக்கு அமைவாக இராணுவத்தின் பிடியில் இருந்து தீர்த்தத்தலத்திற்குச் செல்கின்ற ஆலயத்தின் முன் வீதி மீளவும் ஆலயத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் காணி இன்றும் இராணுவத்தின் பிடியிலேயே உள்ளது. கடந்த 14.07.2016 அன்று 99 அடி உயரம் கொண்ட இராஜ கோபுரம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இராணுவம் ஏற்கெனவே திட்டமிட்டு ஆரம்ப கட்டப் பணிகளை மட்டும் மேற்கொண்டிருந்த சுமார் நூறு அடி உயரம் கொண்டதாக அமையும்வகையில் அமைக்கப்பட்டிருந்த விகாரைக்கான பணிகளை துரிதமாக முன்னெடுக்க தொடங்கியுள்ளனர்.

ஆலயத்திலிருந்து நூறு மீற்றருக்குள் இந்த விகாரை அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னதாக பெரியளவிலான புத்தர் சிலை அங்கு நிர்மாணிக்கப்பட்டுவிட்டது. அதற்காகவே ஆலயத்தின் மூன்றாவது வீதி அமைந்துள்ள ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் இதுவரை காலமும் தற்காலிகமாக தூண் போடப்பட்டு இராணுவத்தினரால் வேலி அமைக்கப்பட்டிருந்தது. எனவே குறித்த காணியை மீண்டும் ஆலயத்திற்கு பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிகை ஆலய நிர்வாகத்திடம் இருந்து வந்தது.

ஆனால் தற்போது இராணுவம் நிரந்தரமாக சுற்றுமதில் அமைக்கும்பணியில் ஈடுபட்டிருப்பதானது ஆலயத்தின் காணி மீண்டும் ஆலயத்திற்கு கிடைக்க வாய்ப்பில்லை என்ற நிலைப்பாட்டினையே ஏற்படுத்தியுள்ளது என ஆலய நிர்வாகம் கவலை தெரிவிக்கிறது.

வரலாற்று சிறப்பு மிக்க ஆலயத்திற்கு மிக அருகில், முழுக்க முழுக்க தமிழ் மக்கள் வாழ்கின்ற ஒரு பிரதேசத்தில் பாரிய விகாரை அமைப்பது பொது மக்கள் மத்தியிலும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது சுட்டிக்காட்டப்பட்டு வடக்கு மாகாண சபையின் ஐம்பத்து எட்டாவது அமர்வின் போது உறுப்பினர் பசுபதிப்பிள்ளையால் கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்த பிரேரணையே நேற்றைய தினம் ஜனாதிபதியின் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (2-4)

## முல்லையில் இன்று கவனயீர்ப்பு பேரணி

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் உரிமைகள் மற்றும் மக்களின் சுயகௌரவத்திற்கான நிலையம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அமையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முல்லைத்தவு மாவட்டத்தில்செயற்படும்சிவில் நிறுவனாங்கள், அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும்சமூக ஆர்வலர்களின்பங்கு பற்றலுடன் முல்லைத்தீவு நகரில் இன்று காலை அமைதி முறையிலான கவனயீர்ப்புப் பேரணியொன்றை நடத்தவுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்டு பிடித்துத்தர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டு மென வலியுறுத்தியே இப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-281)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ மனிதனை அவனது உண்மை நிலைக்கு உயர்த்துவது இயற்கையை மீறும் முயற்சியே. இயற்கைக்கு இணங்குவதல்ல.

❖ பிறரது குற்றங்களைப் பற்றி ஒருபோதும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவை. ஆனாலும் சரி அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை. ஒருவனுடைய குற்றங்களைப் பற்றிப் பேசுவதால் அவனுக்கு ஒருநாளும் நீ உதவி செய்தவனாகமாட்டாய். மாறாக அவனுக்கும் கேடு செய்து உனக்கும் கேடு இழைத்துக் கொள்கிறாய்.

❖ புகை குடிக்கப் புகையிலையை ஒழுங்காகத் தயாரிக்கக் கூடியவனால்தான் ஒழுங்காகத் தியானிக்கவும் முடியும்.

❖ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வெளியேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு [illegible] அடிமைத்தனம் இல்லை. அவனது மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழத் தகுதி பெற்றவன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இமையாணன் மத்தியின் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது வதிரி டயமன்ஸ் வி.கழகம்






பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் பலம்வாய்ந்த அணியை வீழ்த்தி இமையாணன் மத்தியின் வெற்றிக்கிண்ணத்தையும் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் பெற்றது கொண்டது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மின்னொளியில் குறித்த மைதானத்தில் இடம்பெற்றது.

இவ்விறுதியாட்டத்தில் யாழ். மாவட்டத்தில் பலம்பொருந்திய யாழ். நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

இறுதியாட்டத்திற்கு உரிய வலகையில் அமைந்திருந்த இவ்வாட்டத்தில் முதல் பாதியின் 6 ஆவது நிமிடத்தில் சென்மேரிஸ் அணிக்கு மூலை உதை கிடைத்தது. அதனை அவ்வணியின் முன்னணி வீரர் உதைக்க ஜெனட் அழகாகக் கோலாக மாற்ற ஆட்டம் அனல் பறந்தது . தொடர்ந்து ஆட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது சென்மேரிஸ் அணியின் கோல்பகுதிக்குள் வைத்து அவ்வணியின் பின்கள வீரர் விதிகளுக்கு முரணாக விளையாட டயமன்ஸ் அணிக்கு தண்ட உதை கிடைத்தது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய உசா நேர்த்தியாக உதைத்து கோலாக்க 1:1 என ஆட்டம் சமநிலை கண்டது. தொடர்ந்து 25 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் மற்றொரு வீரர் துஷி மேலும் ஒருகோலையும் போட 2:1 என்ற டயமனின் ஆதிக்கத்துடன் முதற்பாதியாட்டம் நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதியாட்டத்தில் பழிதீர்க்க வேண்டும் என்ற அவருடன் சென்மேரிஸ் அணியினரும் கோல்கள் போட விடாமல் தடுத்து வெற்றியைத் தக்கவைக்க இரு அணியினரும் முனைப்புக் காட்டினர் . ஆட்டத்தின் பெரும் பகுதி நிறைவடைந்த நிலையில் டயமனின் வெற்றி உறுதி என்றிருந்த நிலையில் 58 ஆவது நிமிடத்தில் சென் மேரிஸ் அணிக்கு நேர் உதை ஒன்று கிடைத்தது.அதனை நிதர்சன் கோலாக்க 2:2 என்று ஆட்டம் சமநிலையில் நிறைவ டைந்தது.

இதனையடுத்து வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 4:3 என்ற கோல்கணக்கில் டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று மத்தியின் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

அதற்கு முன்னர் இடம்பெற்ற மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மணற்காடு சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைக் கைப்பற்றியது. இறுதிப்போட்டிக்கு ஆட்டநாயகனாக சென்மேரிஸ் அணியின் வீரர் நிதர்சனும் தொடர் ஆட்டநாயகனாக டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் பிறேம் குமாரும்(பீமா) சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த ஜெனாவும் சிறந்த பின்கள வீராக சென்மேரிஸ் வீரர் யுன்றறனும் மக்களை கவர்ந்த வீராக. பலாலி விண்மீன் அணியின் வீரர் காண்டீபனும் சிறந்த நன்னடத்தை அணியாக குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணியும் தெரிவு செய்யப்ப ட்டன.

வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக்கிண்ணங்களையும் பதக்கங்களையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வழங்கிக் கௌரவித்தார். (க-60)





உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னட்டு வல்வைக்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான தம்பதிகளுக்கான மெதுவான சைக்கிள் ஓட்டம் அண்மையில் நடைபெற்ற போது...

## அல்வாய் விளையாட்டு விழா மாலுசந்தி மைக்கல் சம்பியன்

பரபரப்பான ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி சம்பியன் ஆகியது மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம்.

சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, கனடா ஒன்றியங்கள் இணைந்து நடத்தும் அல்வாய் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் அல்வாய் பாரதிதாசன் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொயில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இப்போட்டியில் அல்வாய் நாவலடி ஏ அணியை வீழ்த்தி வதிரி டயமன்ஸ் அணியும் அல்வாய் நாவலடி கலைமகள் பி அணியை வீழ்த்தி மைக்கல் அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் 17:28 என்ற புள்ளிகள் அடிப்படையில் வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி மாலுசந்தி மைக்கல் அணி சம்பியனாகியது.

அல்வாய் கிராமத்தை சேர்ந்த 14 விளையாட்டுக்கழகங்கள் இந்த தொடரில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## இளவாலை யங்கென்றிஸ் சுப்பர் 8இற்கு தெரிவாகியது

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் சுப்பர் 8 இற்கு தெரிவாகியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மேற்படி சுப்பர் 8 போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

பரபரப்பான போட்டியில் 3:2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்கென்றிஸ் வெற்றி பெற்று சுப்பர் 8 இற்கு தெரிவாகியுள்ளது. சுப்பர் 8இற்கு தெரிவாகிய அணிகள்,

பலாலி விண்மீன்,மயிலங்காடு ஞானமுருகன், கம்பர்மலை யங்கம்பன்ஸ், இளவாலை சென்.லூட்ஸ், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், இளவாலை யங்கென்றிஸ், குப்பிளான் குறிஞ்சிக்குமரன், அல்வாய் மனோகரா. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## வலைப்பந்தாட்ட பயிற்சி பட்டறை

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஒருங்கிணைப்புடன் வர்த்தக வலைப்பந்தாட்டச் சங்கம் வடமாகாண வலைப்பந்தாட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சிப்பட்டறையினை சிறந்த அனுபவம் வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு செப்டெம்பர் மாதம் 24, 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையில் பங்கு பெற விரும்பும் வலைப்பந்தாட்டப் பயிற்றுநர்களை யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தலைவர் திருமதி யு.கு.து.றூபசிங்கத்திடம் அல்லது சங்கத்தின் செயலாளரிடம் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள் ளுமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (கு)

## தேசிய மட்ட திறந்த வலைப்பந்தாட்ட போட்டி

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தேசிய மட்ட திறந்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இச்சுற்றுப்போட்டியில் பங்கு பெற விரும்பும் யாழ்.மாவட்டத்திலுள்ள பதிவு செய்த கழகங்களை யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திருமதி யு.கு.து.றூபசிங்கத்திடம் அல்லது சங்கத்தின் செயலாளரிடம் 15.10.2016 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

## உதைபந்தாட்டத்திற்கு விண்ணப்பிக்குக

திருக்கோவில்உதயசூரியன்விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படுகின்ற அமரர் அரியநாயகம் கவீந்திரன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. போட்டிகள்யாவும் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறும்.

சம்பியன் ஆகும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் ஞாபகார்த்த கிண்ணமும் 2 ஆம் இடத்தினை பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் ஞாபகார்த்த கிண்ணமும் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள் கபளீகரம் ...

வலிவடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொதுமக்களின் காணிகள் சிறு சிறு பகுதிகளாக கடந்த 2 வருடங்களில் விடுவிக்கப்பட்டு வந்தன. அந்த நிலையில் 460 ஏக்கர் காணிகளை ஒருவாரத்தினுள் விடுவிப்பதாக அண்மையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வலிவடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களிடம் 3 விதமான படிவங்கள் யாழ் மாவட்டச் செயலகத்தினால் கிராம சேவகர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

அதாவது முகாம்களில் வாழும் காணிகள் அற்ற மக்களுக்கு 2 பரப்பு காணியும் வீடும் வழங்குவதாக தெரிவித்துள்ள படிவமும், விடுவிக்கப்படவுள்ள காணிகளை இனம் காட்டிய மக்களுக்கு அவர்களின் காணிகளை விரைவில் விடுவிப்போம் என தெரிவித்துள்ள படிவமும் மற்றும் வலிவடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கென பாதுகாப்பு படையின் பயன்பாட்டிற்கு சுவீகரிக்கவுள்ள காணிகளுக்கு இலாபகரமான நட்டஈடு வழங்குதல் என தெரிவித்த படிவமும் மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் நேற்றைய தினம் விநியோகிக்கப்பட்ட நட்டஈடு வழங்குவதாக தெரிவித்த படிவத்தினால் மக்கள் அனைவரும் பெரும் பதற்றத்திலும் ஏமாற்றம் அடைந்த நிலையிலும் செய்வதறியாது திகைத்துப்போயுள்ளனர்.

அதாவது குறித்த படிவத்தில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டில் இருக்கும் சில நிலங்கள் விடுவிக்கப்படமாட்டாது எனவும் அவற்றிற்கு போதுமான நட்டஈடு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தரவுகள் மற்றும் கள நிலைவரங்களுக்கு அமைய தற்போது படையினரின் பயன்பாட்டிலிருக்கும் தங்களுக்குச் சொந்தமான நிலம் சுவீகரிக்கப்படலாம் என்பதோடு அவ்வாறு சுவீகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு பொருத்தமானதும் இலாபகரமானதுமான நட்டஈடு வழங்கப்படும் என்பதை அறியத்தருவதாக தெரிவித்து யாழ் மாவட்ட அரச அதிபரினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு கிராம சேவகர்கள் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதை அறிந்த அனைத்து மக்களும் தமது சங்க உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தியதுடன் உடனடியாக இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் இந்த செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என் கோரியதுடன் மக்கள் பாரிய போராட்டத்துக்கு தயாராகவுள்ளதாகவும் எச்சரித்துள்ளனர். (செ-9)

## தாய், தந்தையரை ...

மேற்படி கருத்து தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் குறிப்பிடுகையில், வலி வடக்கு மக்களுக்கு அவர்களுடைய காணிகள் மிக அவசியமானவை. மாற்று காணிகளையோ, நட்டஈட்டையோ அவர்கள் விரும்பவில்லை என கூறியுள்ளார்.

வலி வடக்கு மக்கள் மீண்டும் மீண்டும் தங்கள் சொந்த காணிகளையே கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உங்களுக்கு மாற்று காணிகள் வழங்குகிறோம், பெறுமதியான நட்டஈடுகளை வழங்குகிறோம் என கூறப்படுகின்றது.

உங்கள் அப்பா, அம்மாவை விட்டு வாருங்கள். நாங்கள் நல்ல அப்பா, அம்மாவைத் தருகிறோம். பணம் தருகிறோம் என யாரும் கேட்டால் போக முடியுமா? அப்படித்தான் வலி வடக்கு மக்களுக்கும் அவர்களுடைய நிலங்கள் அவசியமானவை. மக்கள் அவர்களுடைய சொந்த நிலத்தையே கேட்கிறார்கள். அதை வழங்குவதில் எந்த தவறும் இல்லை என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார். (செ-11)

# யாழ். விஜயத்தின்போது பான் கீ மூன் விக்னேஸ்வரனைச் சந்திக்க மாட்டார்!



(யாழ்ப்பாணம்)


நாளை புதன்கிழமையன்று இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவரது யாழ் விஜயத்தின் போது வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதற்காகவே யாழ்.வருகின்றது என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரும் மூன் எதிர்வரும் இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கட்சி குழுவினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது வடமாகாண முதலமைச்சரைச் சந்திப்பதற்கானதொரு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பதுடன் அவர் மூனைச் சந்திக்க வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடனேயே அதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொள்ள முடியுமென்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் கூட்டமைப்புக்கும் முதலமைச்சருக்கும் இடையில் நிலவும் கருத்து வேறுபாடுகள் அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்குமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் ஐ.நா செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயமானது நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மேம்பட வழிசமைக்கும் என்று தெரிவித்துள்ள,

இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்திச்சேவை



ஸ் தானிகர் நவநீதம்பிள்ளையின் ஒருதலைபட்சமான அணுகுமுறையை மூனின் விஜயம் சீர் செய்யும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் நவநீதம்பிள்ளையின் பதவிக் காலத்தின் போது இலங்கைக்கும் ஐ.நாவுக்கும் இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தியிருந்தது என்றும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மல்லாகம் கோணப்புலம் முகாமிற்கு செல்லும் மூன் அங்குள்ள மக்களை பாரவையிடவுள்ளதோடு, மீள்குடியேற்றப்பட்ட மக்களையும் சென்று பார்வையிட வுள்ளார். மேலும் இராணுவத்தின் வசமுள்ள மக்களின் காணிகளையும் அவர் நேரில் சென்று பார்வையிடவுள்ளதாக அறிய முடிகின்றது. (செ-4)

## யாழ். போதனா ...

நிரப்பு நிலையத்திலிருந்து மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோலை நிரப்பிவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி பருத்தித்துறை வீதியூடாக பயணிக்க முற்பட்ட வேளை பின்னால் வந்த பேருந்து மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதல் படுகாயமடைந்த வைத்தியர் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று இரவு 7.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறையிட்டதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் யாழ் போதனா வைத்தியசாலையில் இரவு நேர வெளி நோயாளர் பிரிவில் கடமையாற்றும் வைத்தியர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-30,60)

## காணாமல்போனோ ...

மான இன்று காணாமல்போனவர்களின் உறவுகள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து வடகிழக்கு மாவட்டங்களில் காலை 9 மணியளவில் குறித்த கவனயீர்ப்பு பேரணி மற்றும் கவனயீர்ப்பு போராட்டங்களை அந்தந்த பகுதிகளில் முன்னெடுக்கவுள்ளனர்.

அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் யாழ் மாவட்டச்செயலகத்தில் இருந்து ஆரம்பித்து கோவில் வீதியில் அமைந்துள்ள ஐநா அலுவலகம் வரை சென்று மகஜர் ஒன்றினை கையளிக்கவுள்ளனர்.

அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் செபஸ்ரியர் பேராலயத்தில் இருந்து மன்னார் மாவட்டச் செயலகம் வரை பேரணி செல்லும் எனவும் அத்துடன் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலிலும், முல்லைத்தீவு மாவட்டச் செயலக முன்றலிலும் வவுனியா விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையிலும் குறித்த கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (செ-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## கொழும்பு துறைமுகத்தில் தீ விபத்து



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தில் நேற்று பிற்பகல் பாரிய தீவிபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது. இறப்பர்களஞ்சியத்திலேயே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக கொழும்புத் துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீவிபத்தினால், எழுந்துள்ள பாரிய புகைமூட்டத்தை தொலைவில் இருந்தே அவதானிக்க முடிந்தது. தீயை கட்டுப்படுத்தும் முயற்சிகளில் தீயணைப்புப் படையினர் நேற்று நள்ளிரவுவரை தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். (செ-11)





வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இருந்து கடந்த 25ஆம் திகதி ஆரம்பமான நல்லூர்க் கந்தன் ஆலயத்தை வந்தடைவதற்கான வேல் தாங்கிய பாதயாத்திரை நேற்று இரவு சாவகச்சேரி சிவன் கோயிலை வந்தடைந்துள்ளது. மேற்படி யாத்திரை இன்று காலை மீண்டும் நல்லூரை நோக்கி புறப்படவுள்ளது. (படங்கள் - முக்கொம்பன் செய்தியாளர்)

## பாரிய குற்றச்சாட்டுக்களை — பணத்தினால் மறைக்க முடியாது

### அரசசார்பற்ற நிறுவனங்கள் சுட்டிக்காட்டு

அரசாங்கம் மீது சர்வதேச அளவில் காணப்படுகின்ற பாரிய குற்றச்சாட்டுக்களை ஒருபோதும் பணத்தை விரயம் செய்து மறைத்துவிட முடியாது என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கருத்தை வெளியிட்டனர்.

நாட்டில் இயங்கிவரும் மாற்றுக் கொள்கைக்கான நிலையம், டிரான்ஸ்பெரன்ஸி இன்டரநஷனல், சர்வோதயா போன்ற முன்னணி அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த ஆட்சிகாலத்தில் சர்வதேச அளவில் இலங்கை மீது நற்பெயரை ஏற்படுத்திக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோடிக்கணக்கான பணத்தை விரயம் செய்து போலியாக விம்பம் ஏற்படுத்த முயற்சி செய்திருந்தார். இப்படியான முயற்சியில் மைத்திரி - ரணில் இணைந்த தேசிய அரசாங்கமும் ஈடுபட்டிருப்பதாக வெளியக விவகாரம் குறித்து ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த சர்வோதயா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமிந்த ராஜகருணா, பணத்தை விரயம் செய்து உருவாக்கப்படும் நற்பெயரிலான விம்பம் வெகுநாட்களுக்கு நிலைக்காது என்றும் கூறினார்.

நற்பெயரானது தங்களது நடத்தையிலேயே ஏற்படுகிறது. அரசாங்கம் என்ற வகையில அதன் நடத்தை சிறந்து காணப்பட்டால் அல்லது அமைப்பு, தனிநபர் என்ற வகையிலும் செயற்பாடு சிறந்து விளங்கினால் நற்பெயரானது உருவாகும். சில காரணத்தினால் நமது பெயர் சீரழிந்தால் அதனை நடத்தையில் மாற்றியமைப்பதும் நமது கடமையே. மாறான நடததையின்றி வெறும் பணத்தை விரயம் செய்து நற்பெயரை உருவாக்க முயற்சித்தால் அப்பெயர் தற்காலிகமாகவே இருககும். ஒரு தண்ணீர்க் குவளையில் பந்து ஒன்றை பணம் விரயம் செய்து அழுத்திவைத்திருந்தால்என்றோ ஒருநாள் அது வெளியே வரும்என அவர் குறிப்பிட்டார்.(செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாந்தனுக்கு...

வைக்கப்பட்டுள்ள, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயலாளரான பி.பிரசாந்தனை பிணையில் செல்ல, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

2008ஆம் ஆண்டு ஆரையம்பதி பிரதேசத்தில் நடைபெற்ற இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பாக, இவரும், இவரது சகோதரரான ஹரன் என்பவரும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 28-ஆம் திகதி அன்று குற்றப் புலனாய்வு துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இருவரும் தங்களை பிணையில் செல்ல அனுமதி கோரி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தனர்

இந்த மனுவை பரிசீலனைக்கு பின் ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்றம், தலா ரூபாய் 50 ஆயிரம் ரொக்கம் மற்றும் ரூபாய் 10 லட்சம் பெறுமதியுடைய இரு ஆட்பிணையிலும் செல்ல அனுமதி வழங்கியது.

திங்கள், வியாழன் ஆகிய வார நாட்க ளில், காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் நண்பகல் 12 மணிக்கு முன்னதாக ஆஜராகி கையொப்பமிட வேண்டும் என்ற நிபந்தனையும் அந்த பிணை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது

2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ஆம் திகதி அன்று சந்தேக நபர்களின் சொந்த கிராமமான ஆரையம்பதியில் தமிழ்நாடு என அழைக்கப்படும் ஆசிரியரான கி.மனோகரன் அவரது வீட்டில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உறவு முறை பெண்ணொருவரும் இச்சம்பவத்தில் பலியானார்.

இச்சம்பவம் நடைபெற்று 7 வருடங்கள் கடந்த நிலையில், சம்பவத்தை நேரில் கண்டதாக கூறப்படும் கி.மனோகரனின் சகோதரியொருவர், கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் குற்றப்புலனாய்வு துறையினரிடம் செய்திருந்த முறைப்பாட்டில் இந்த இருவர் மீதும் சந்தேகம் வெளியிட்டார்.

காத்தான்குடி பொலிஸ் குற்றப்புலனாய்வு துறையினரால் இது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணைகளை அடுத்து முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான பி.பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரரான ஹரன் ஆகியோர் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவரது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரான கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனும் மற்றுமோர் கொலை தொடர்பாக 10 மாதங்கள் கடந்தும் மட்டக்களப்பு சிறையில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்புடைய சந்தேக நபரான இவரது விளக்கமறியல் மட்டக்களப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தால் ஏற்கெனவே வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவரும் தன்னை பிணையில் செல்ல அனுமதி கோரி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பயங்கரவாத...

எனினும் அந்த பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐயாத்துரை மோகதாஸ் எனும் சந்தேகநபரை சந்திக்கும் அவகாசத்தை பொலிஸார் மறுத்து வருவதாக குற்றம்சாட்டிய சட்டத்தரணி லக்சான் டயஸ், எனினும் பயங்கரவாத தடுப்பு பிரிவின் தலைமை அதிகாரியின் அனுமதி அவசியமெனக் கூறியுள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இதன் மூலம் ஜனாதிபதி மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட வழிக்காட்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணி லக்சான் டயஸ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வினால் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் வழிக்காட்டுதல்களை பயங்கரவாத புலனாய்வு பிரிவு மீறியுள்ளது.

சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய சந்தேகநபர்களை அணுகமுடியும். எனினும் பயங்கரவாத தடுப்பு பிரிவனரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை முன் அனுமதியின்றி சட்டத்தரணிகள் சந்திப்பதற்கு இடமளிக்கப்படுவது இல்லை. அதற்க அனுமதி கடிதம் கேட்கிறார்கள்.

இது மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் அறிவித்தல்களுக்கு முரணான விடயம். இது பொலிஸ் மாஅதிபரின் உயர் நீதிமன்றத்துடனான இணக்கப்பாட்டிற்கு முரணான விடயம். இங்கு இரண்டு பொலிஸ் சேவைகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் எனக்கு காணப்படுகின்றது. காரணம் இவர்கள் உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை மீறி செயற்படுகின்றார்கள். சந்தேகநபர்களை சந்திக்க காலதாமதம் ஏற்படுகின்றது.

இது தொடர்பில் நான் பலமுறை முறைப்பாடு செய்துள்ளேன். எனினும் எவ்வித பிரயோசனமும் இல்லை. ஆகவே இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாவிடின் ஐ.நா செயலாளர் பான் கீ மூன் நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி என்ற வகையில் நான் அவருக்கு அறிவிப்பேன்.

இது தொடர்பில் என்னுடைய முழுமையான எதிர்ப்பினை வெளியிடவுள்ளேன். பயங்கரவாத தடுப்பு பிரிவு, ஜனாதிபதி மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினை மதிக்கவில்லையா என்ற கேள்வி இவ் விடயத்தில் எழுகிறது என அவா மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# சொந்த இடத்தில்...

குழுவினர் நேற்றைய தினம் முதலமைச்சரது அலுவலகத்தில் முதலமைச்சரை சந்தித்து கலந்துரையாடி யிருந்தனர்.

இதன்போதே உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய தலைவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர். இந்த சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய தலைவர், அவருடன் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் ஐடா ஆகியோர் தலைமையிலான குழுவினர் என்னை வந்து சந்தித்திருந்தார்கள். இது வரை காலம் நடைபெற்ற நெல்சிப் திட்டத்தின் செயற்திட்டங்கள் பற்றியும், இனி ஆரம்பிக்கப்படவுள்ள திட்டங்கள் பற்றியும் எனக்கு அறிவிப்பதற்காக வந்திருந்தார்கள்.

2010 ஆண்டு ஆரம்பமாகிய நெல்சிப் திட்டம் இந்த வருடம் டிசெம்பர் மாதம் முடிவடைய உள்ளது. இந்த நிலையில் நெல்சிப்பின் இரண்டாவது செயற்திட்டமாக வடக்கு கிழக்கு வாழ்வாதார மேம்படுத்தல் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அடுத்து மூலோபாய நகராங்கள் அபிவிருத்தி செயற்திட்டம். இது தொடர்பில் கடந்த ஒரு வருடமாக அவர்களோடு பேசி வருகின்றோம்.

யாழ்.நகரை எவ்வாறு அபிவிருத்தி செய்வது, வாகனங்களை எவ்வாறு ஒருங்கமைப்பது, வீதிகளை எவ்வாறு போக்குவரத்து நெரிசல் இல்லாமல் மாற்றியமைப்பது என்பது தொடர்பில் பேசியுள்ளோம், மூன்றாவது விவசாயத்தை நவீனமயமாக்கல் செயற்திட்டம். நாங்கள் காலாதிகாலமாக பண்டைய விவசாய முறையை தான் மேற்கொண்டு வருகின்றோம்.

அதனை தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு, மண்ணுக்கு ஏற்றவாறு, சந்தை நிலவரத்துக்கு ஏற்றவாறு, மாற்ற வேண்டிய நிலை உள்ளது. மேலும் எதனை பயிரிட்டால் அதிக வருமானத்தை பெறலாம் என்பது தொடர்பில் அறிய வேண்டிய நிலை உள்ளது எனவே தான் விவசாய நவீனமயமாக்கல் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு கொண்டு வருகின்றன. ஆனால் அந்த நிலத்தில் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ள எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை. அவற்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளனர். மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் உள்ள வீதிகளை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவற்றைவிட தனியார் துறையினர் வடக்கில் முதலிடுவதற்கு உலக வங்கியால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என கேட்டறிந்த அவர்கள், இவ்வாறான முதலீடுகளுக்கு அரசியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்பட்டால் காப்புறுதிகளை உலக வங்கி வழங்க தயார் எனவும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்கள் தமது சொந்த நிலங்களுக்கு திரும்பி செல்லும் போது அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தாம் செய்வோம் எனக் குறிப்பிட்டதுடன் சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்பட உலக வங்கி தொடர்ந்தும் உதவி புரியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என முதலமைச்சர் ஊடகங்களுக்கு கூறினார். (செ-4)

# கடற்படை பேருந்து...

வண்டியில் சென்றுகொண்டிருந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் மீது வேகமாக மோதியுள்ளது.

இதன்போது துவிச்சக்கரவண்டியுடன் தூக்கி வீசப்பட்டு குடும்பஸ்தர் படுகாயங்களுக்குள்ளானார்.

உடனடியாக படுகாயமடைந்த நபரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் பரிதாபகரமாக அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கடற்படை பேருந்து சாரதியை கைது செய்த காங்கேசன்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9.4.60)

# நட்டஈடு...

பெயர்ந்து வாழும் மக்களிடம் அவர்களுடைய காணிகள் தேசிய பாதுகாப்பு கருதி பாதுகாப்பு படையின் தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளதாகவும் அதற்குரிய நட்டஈடு வழங்குவதாகவும் யாழ்.மாவட்டச்செயலகத்தின் ஊடாக படிவங்கள் நேற்று விநியோகிக்கப்பட்டிருந்தன.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு குடிமகனும் தனது சொந்த நிலத்தை யாரும் சுவீகரிப்பதற்கு அனுமதிக்க மாட்டார்கள். அந்த வகையில் வலி வடக்கில் இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ள எமது மக்களின் காணிகளை எவரும் சுவீகரிக்க முடியாது.

பொதுமக்கள் தொடர்புடைய விடயங்களில் அரசோ அதிகாரிகளோ தன்னிச்சையாக முடிவை எடுக்க முடியாது. இது ஒரு பாரதூரமான விடயம் ஆகும்.

வலி வடக்கு காணி தொடர்பில் பொதுமக்களால் உச்ச நீதிமன்றத்தில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த நிலையில் காணிகளை சுவீகரிப்பதாக அரசு அறிவித்துள்ள விடயத்தை நாம் கடுமையாக கண்டிக்கிறோம். இந்த நடவடிக்கையினை உடனடியாக நிறுத்த வேண்டும் இது தொடருமானால் உச்ச நீதிமன்றில் அறிவிக்கவுள்ளோம்.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பாக பிரதமருடனும் மீள் குடியேற்ற அமைச்சருடனும் இன்று பேசவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.